வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 05.10.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 304 | பக்கங்கள் : 16

# அரசியல் தீர்வு விடயத்திலாவது ஒன்றிணைந்து செயல்படுங்கள்

## தமிழ் கூட்டமைப்பினருடனான சந்திப்பில் இந்திய வெளியுறவு செயலர் வலியுறுத்து



கொழும்பு, ஒக்ரோபர் 05

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெறவேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து இந்தியா பின்வாங்கவில்லை. உடனடியாக தேர்தலை நடத்தி, மாகாண சபை முறையை அமுல்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை இலங்கை அரசுக்கு வழங்குகின்றோம். எனினும், 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு வேண்டும் என்ற ஒரு விடயத்திலாவது தமிழ்த் தரப்புகள் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். இந்த விடயத்தில் தமிழ்த் தரப்புகளின் கோரிக்கை அழுத்தமாக இல்லை என்பதே இந்தியாவின் நிலைப்பாடு."

15

## பயங்கரவாத தடுப்பு சட்டத்தை திருத்தியமைக்க உடன் நடவடிக்கை

### ஐரோப்பிய குழுவிடம் ஜனாதிபதி உறுதி



கொழும்பு, ஒக். 05

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில், திருத்தப்பட வேண்டிய உறுப்புரைகளைத் திருத்த, உடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாகத் திருத்த இலங்கை அரசு

15

## எண்ணெய் தாங்கிகள் இந்தியாவுக்கு நிரந்தரமாக வழங்கப்பட்டுவிட்டன

### அமைச்சர் உதய கம்மன்பில சபையில் தகவல்

கொழும்பு, ஒக். 05,

ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் திருமலை எண்ணெய் தாங்கிகள் நிரந்தரமாகவே இந்தியாவுக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும், இதனால் இந்தியாவுக்கு புதிதாக வழங்குவதற்கு எண்ணெய் தாங்கிகள் எதுவும் இல்லை என்றும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதேவேளை இவ்வாறு இந்தியாவுக்கு வழங்

15

## நிருபமா ராஜபக்ஷவுக்கு சொந்தமாக வெளிநாடுகளில் எட்டு நிறுவனங்கள்!

### அம்பலப்படுத்தியது 'பண்டோரா பேப்பர்ஸ்'

கொழும்பு, ஒக். 05

முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளில் 8 நிறுவனங்களை நிறுவியுள்ளார் என்று பண்டோரா பேப்பர்ஸ் வெளிபடுத்தியுள்ளது.

நிருபமா ராஜபக்ஷ 2005 -2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினராகவும், 2010 - 2015 வரை நீர்ப்பாசனத் துறை பிரதி அமைச்ச ராகவும் பதவி

15

## சமூகவலைதளங்கள் நேற்று செயலிழந்தன!

கொழும்பு, ஒக். 05

பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்ராகிராம், மெசெஞ்சர் ஆகிய சமூகவலைதளங்கள் நேற்று இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளில் செயலிழந்தன.

இந்த சேவைகள் நேற்றிரவு 9.15 மணி

15

## கொரோனா தொற்றால் மேலும் 43 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 05

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு மேலும் 43 பேர் பலியாகினர் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன் தினம் (ஒக்-03) இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை

15

## 786 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, ஒக். 05

நாட்டில் மேலும் 786 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 21 ஆயிரத்து 218 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து

15



## இப்படியும் நடக்கிறது...!

நீச்சல் குளத்தில் தண்ணீர் அடிக்கடி கெட்டு விடுவதை அறிந்த ஹோட்டல் முதலாளி காவல்காரனை அழைத்து, “ஒரு வாரத்திற்கு யாரையும் நீச்சல் குளத்தில் குளிக்க அனுமதிக் காதே”, என்றார்.

ஏன் தண்ணீர் கெட்டுப்போகிறது என்பதை கண்டறிய வேண்டும் என்பது அவரது எண்ணம்.

அன்று மாலையே இளம்பெண் ஒருத்தி குளிப்பதற்காக அங்கு வந்தாள். தான் அணிந்திருந்த ஆடையை ஒவ்வொன்றாக கழற்றிப் போட்டாள். நீச்சல் குளத்தில் இறங்கத் தயாரானாள்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த காவல்காரன், “இங்கு யாரும் குளிக்கக்கூடாது”, என்றான்.

“நான் உடைகளைக் கழற்றுவதற்கு முன்னரே ஏன் இதைச் சொல்லி இருக்கக்கூடாது”, என்று கோபத்துடன் கேட்டாள் அவள்.

அதற்கு அவன், “இங்கு யாரும் குளிப்பதைத் தடுப்பதுதான் என் வேலையே தவிர, உடைகளைக் கழற்றும்போது தடுப்பது என் வேலை அல்ல”, என்றான்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் மூவரும் கூட்டமைப்பின் தலைவரைச் சந்தித்த விடயங்களை ஒவ்வொருவரும் தத்தமது விருப்பப்படி செய்தியாக்கி வருகின்றனர்.

கூட்டமைப்பில் சுமந்திரனின் செயல்பாடுகள் கட்சிக்கு ஏற்படுத்துகின்ற பாதிப்புக்களை எடுத்துச் சொல்வதுதான் இந்த சந்திப்பின் நோக்கம் என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல.

அண்மைக்காலமாக சுமந்திரன், பங்காளிக்கட்சிகள் பற்றி தெரிவித்த கருத்துக்கள் அவர்களை கோபப்படுத்தியிருந்ததை இந்தப் பத்தியில் பார்த்திருக்கின்றோம். குறிப்பாக புளொட் இயக்கம் பற்றியும், அதன் தலைவர் சித்தார்த்தன் பற்றியும் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள், எப்போதும் எதனையும் அமைதியாக இருந்து கடந்து செல்லும் சித்தார்த்தனையே கோபப்படுத்தியதையும் இங்கு பார்த்தோம்.

புளொட் இயக்கத்தை தாங்கள் மன்னித்து விட்டுத்தான் கூட் டமைப்பில் சேர்த்ததாக சுமந்திரன் சொல்ல, நீங்கள் எங்களை மன்னித்தது இருக்கட்டும், உங்களை இன்னமும் மன்னிக்காத படியால்தானே நீங்கள் இப்போதும் அதிரடிப்படையுடன் நடமாடவேண்டியிருக்கிறது என்று சித்தர் பதில்சொல்லப் போய் நிலைமை மோசமானது.

அந்த கட்சித் தலைவர்கள், சுமந்திரன் பற்றி அடுக்கிய புகார் பட்டியலை இந்தப் பத்தியில் ஏற்கனவே பாத்தோம்.

அங்கு நடந்த ஒரு சுவாரசியமான சம்பவத்தை அறிந்த போதே மேலேயுள்ள கதை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

யாழ்ப்பாண மாநகர சபையில் கூட்டமைப்பின் ஆனல்ட்டை, தோற்கடிப்பதில் சுமந்திரனின் பங்கு பற்றி இந்தத் தலைவர்கள் குறிப்பிட்டபோது, அதனை ஆச்சரியமாகவும், அப்படியெல்லாம் நடந்ததா என்ற தொனியிலும் சம்பந்தன் எதிர்வினையாற்றியபோது, செல்வம் குறுக்கிட்டு, மாவையிடம் ஒரு கேள்வியைக் கேட்டாராம்.

‘மாவை அண்ணே, இந்த விடயம் நடந்து முடிந்ததும் நீங் கள் இதுகுறித்து ஒரு கடிதத்தை ஐயாவுக்கு எழுதியதாக சொன் னீர்களே, அந்தக் கடிதத்தை ஐயா படிக்கயில்லைப்போல இருக்கிறதே?’ என்று செல்வம் கேட்டபோது, அவர் சொன்ன பதில் அது என் வேலை இல்லை என்று அந்தக் காவலர் சொன் னதுபோல இருந்தது இந்த ஊர்க்குருவிக்கு.

‘நான் அந்தக் கடிதத்தை சுமந்திரனுக்குத்தான் அனுப்பின னான்’!

யாழ். மாநகர சபை விடயத்தில் கூட்டமைப்பின் வேட்பாள ராக நிறுத்தப்பட்ட ஆனல்ட்டை தோற்கடிப்பதற்கு சுமந்திரன் தான் காரணமானவர் என்று அப்போது பலரும், கூட்டமைப் பினரே குற்றம்சாட்டினர்.

கூட்டமைப்பின் ஓர் உறுப்பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாததாலேயே ஆனல்ட் தோல்வியடைந்ததும், அந்த வாக்களிப்பில் கலந்துகொள்ளாத உறுப்பினர் சுமந்திரனின் ஆதரவாளர் என்பதும் மட்டுமே இவர்கள் சொல்லும் காரணங் கள்.

அந்த உறுப்பினர் சுமந்திரனின் ஆதரவாளர் என்பது மாத்தி ரம் அவர்மீது சுட்டுவிரலை நீட்ட போதுமானது அல்ல. ஆனால், அந்த மாநகர முதல்வர் தெரிவின்போது திரைமறை வில் நடந்த பல்வேறு சங்கதிகள் இந்த ஊர்க்குருவிக்கு தெரிந்தவைதான்.

அவை பொதுவெளியில் சொல்லக்கூடியவை அல்ல.

ஓர் அரசியல்வலாதி ஊழல் செய்தார் என்று - அதாவது பணத்தை வாங்கிக்கொண்டு ஒரு விடயத்தை செய்துகொடுத் தார் என்று யாராவது புகார் கூறினால், ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகுபவர் சவால் விடுப்பார். நான் ஊழல் செய்தேன் என்பதை நிரூபித்தால் நான் அரசியலில் இருந்தே விலகிவிடு கிறேன் என்பார்.

அவ்வாறு அவர் சவால்விடுவது, அவர் ஊழல் செய்ய வில்லை என்று மக்கள் நம்பவேண்டும் என்பதற்காக மட்டு மல்ல, அப்படி யாராலும் நிரூபிக்க முடியாது என்பதும் தெரிந்துகொண்டதால்தான்.

அதுபோலத்தான் இந்த விடயமும் நிரூபிக்க முடியாதவை. ஆனால், நிதர்சனமானது எது என்பதை அறிய மக்கள் ஒன்றும் அதிகம் சிரமப்பட வேண்டியதில்லைத்தானே.!

**- ஊர்க்குருவி**

# வடக்கில் நேற்று 20 தொற்றாளர்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணத்தில் 14 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 20 பேர் தொற்றாளர்க ளாக அடையாளம் காணப்பட டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் நேற்று 176 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோத னைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 20 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேர், சாவகச்சேரி ஆதார மருத் துவமனையில் 3 பேர், கோப் பாய் பிரதேச மருத்துவமனை யில் 2 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவர் என 13 பேருடன், காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒருவர் தொற்றாளர்களாக அடையா ளம் காணப்பட்டனர்.

இதேபோன்று, முல்லைத் தீவு பொது மருத்துவமனையில் 3 பேர், மல் லாவி ஆதார மருத்துவமனையில் ஒருவர் என நால்வரும், வவுனியா பொது மருத்துவமனையில் 2 பேரும் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டனர்.

(ஐ)

## விபத்தில் காயமடைந்த இளைஞர் உயிரிழப்பு!

வடமராட்சி, ஒக். 05

வடமராட்சியில் இடம் பெற்ற விபத்து ஒன்றில் படு காயமடைந்த மூவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

பருத்தித்துறை - துன் னாலை தெற்கை சேர்ந்த செல்வ ரத்தினம் சிந்துஷன் (வயது -25) என்பவரே இவ்வாறு மரணமா னார்.

கடந்த 30ஆம் திகதி வியா ழக்கிழமை இரவு துன்னாலை கலிகை சந்திக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றது. டிப்பர் வாகனத்தை மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் முந்திச் செல்ல முற்பட்டனர். இதன்போது ஏற்பட்ட விபத் திலேயே மூவரும் படுகாயங் களுக்கு இலக்காகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## தொழில் வழிகாட்டல் வாரம் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 05

இளைஞர் மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களம் ‘நாட்டுக்கு சுமையில்லாத உழைக்கும் தலைமுறை’ எனும் தொனிப்பொருளில் ஒக். 04 - 10 வாரத்தை தேசிய தொழில் வழிகாட்டல் வாரமாக பிரகட னப்படுத்தியுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு யாழ்ப் பாண மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் இணைய நிகழ்நிலை ஊடாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந் தினராக வட மாகாண கல்விய மைச்சின் செயலாளர் எல். இளங் கோவன் கலந்து கொண்டார். மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், பிரதேச செயலா ளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல் விப்பணிப்பாளர்கள், அதிபர் கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் ஆலோ சகர், திறன் அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் மற்றும் திணைக் கள உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ-03)

### கல்வி tv CHANNEL-1

**05.10.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி tv CHANNEL - 2

**05.10.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
05.10.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# யார் வல்லரசுகளின் முகவர்கள்?

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ் வர்தன், பலதரப்பட்டவர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றை, யாழ்ப்பாணத்தில் சந்தித்திருந்தார். இதற்கான ஏற்பாட்டை யாழ்ப்பாண துணைத் தூதரகமே மேற்கொண்டிருந்தது. இது ஓர் இராப்போசன சந்திப்பு என்பதால், இதில் அரசியல் கலந்துரையாடல்கள் பெரிதாக இடம்பெறவில்லை. அரசியல் ரீதியாக கலந்துரையாடுவது தூதரகத்தின் நோக்கமாகவும் இருந்திருக்கவில்லை என்றே அறிய முடிகின்றது. ஆனால், பங்கு கொண்டவர்கள் தங்களின் எதிர்பார்ப்புக்களை பகிர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இதில் பங்குகொண்ட தமிழ்த் தேசிய பின்புலம் கொண்ட அரசியல் பிரமுகர்கள் சிலர், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கின்றனர். இதற்கு இந்தியாவின் ஆதரவையும் கோரியிருக்கின்றனர். ஆனால், அவ்வாறு சிலர் கூறுகின்றபோது, அங்கு பங்குகொண்ட எந்தவோர் அரசியல் பிரமுகரும் அதனை மறுதலித்து பேசவில்லை. இந்த அரசியல் பிரமுகர்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இருந்திருக்கின்றார். பொதுவெளிகளில், 13ஆவது திருத்தச்சட்டத்தை தீவிரமாக எதிர்த்துவரும் அவர், வெளிவிவகார செயலர் ஹர்ஷ் வர்தன் முன்னிலையில் அதுபற்றி வாய்திறக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வல்லரசுகளின் முகவராக தொழில்படுவதாக கஜேந்திரகுமார், சில தினங்களுக்கு முன்னர்கூட, பகிரங்கமாகக் குற்றம்சாட்டியிருந்தார். அவர் இவ்வாறு குற்றம்சாட்டிய சில தினங்களிலேயே, இந்திய இராஜதந்திரியின் இராப்போசன சந்திப்பில் பங்குகொண்டிருக்கின்றார். இவ்வாறுதான் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் - நீண்ட காலமாக, இந்திய தலைவர்களை, அதிகாரிகளை சந்தித்து வருகின்றனர். இந்திய தரப்பை சந்திப்பதால் மட்டும் ஒருவர் இந்தியாவின் முகவராக மாறிவிடலாம் என்றால், இப்போது கஜேந்திரகுமாரும் அதற்கு விதிவிலக்கல்ல.

கஜேந்திரகுமாரும் அவரின் கட்சி உறுப்பினர்களும் பொதுவாகவே இவ்வாறான குற்றச்சாட்டை, ஏனையவர்கள்மீது முன்வைப்பதுண்டு. இங்கு வல்லரசுகள் என்பதால், இந்தியாவும் அமெரிக்காவுமே குறிக்கப்படுகின்றது. ஆனால், இந்த இடத்தில் கேட்க வேண்டிய கேள்வி - இந்தியாவினதும் அமெரிக்காவினதும் முகவர்களாக தொழில்படக்கூடிய வல்லமையுடன் எந்தவொரு தமிழ் அரசியல்வாதியாவது அல்லது, அரசியல் கட்சியாவது இருக்கின்றதா? ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு அனுப்பும் ஒரு கடிதத்தைக்கூட, கருத்தொருமித்து, ஒற்றுமையாக அனுப்ப முடியாத இந்தக் கட்சிகளை, வல்லரசுகளால் எவ்வாறு முகவர்களாக பயன்படுத்த முடியும்?

இலங்கைத் தீவில் செல்வாக்கு செலுத்தக்கூடிய ஓர் உடனடி அயல்நாடு என்னும் வகையில், இந்தியாவின் தலையீடுகள் தவிர்க்க முடியாதவை. அது இந்த தெற்காசிய பிராந்தியத்தின் யதார்த்தம். இதனை கருத்தில் கொண்டுதான் ஈழத் தமிழர் தலைமைகள் செயல்பட முடியும். இந்த அடிப்படையில்தான் தமிழ் மக்களின் பிரதான தலைமை என்னும் வகையில் கூட்டமைப்பு, இந்தியாவின் ஆதரவை கோருகின்றது. இந்தியாவும் தமிழ் மக்களின் கௌரவம், சமத்துவத்தின் மீதான கரிசனையை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றது.

இந்தியா தொடர்பான கூட்டமைப்பின் ஈடுபாடு என்பது தவிர்க்கவே முடியாத யதார்த்தம் தொடர்பானது. இந்த யதார்த்தத்தின் அடிப்படையில்தான் தற்போது கஜேந்திரகுமாரும் வெளியுறவு செயலரின் விருந்துபாசரத்தில் பங்குகொண்டிருக்கின்றார். இந்த சந்திப்பை கஜேந்திரகுமார் புறக்கணித்திருக்கலாம். ஆனால், அவர் புறக்கணிக்கவில்லை - ஏன்? 13ஆவது திருத்தச்சட்டத்தை பற்றி இந்தியா வலியுறுத்த வேண்டியதில்லை என்று வர்தன் முன்னிலையிலேயே அடித்து கூறியிருக்கலாம். ஆனால், கஜேந்திரகுமார் அவ்வாறு செய்யவில்லை - ஏன்? ஏனெனில், இந்தியாவை பகைத்துக் கொள்ளக்கூடாது என்னும் அரசியல் யதார்த்தம். கற்பனையும் யதார்த்தமும் மோதுகின்றபோது, எப்போதுமே இறுதியில் யதார்த்தமே வெற்றிபெறுகின்றது. இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பவர்கள் அனைவரும் வல்லரசுகளின் முகவர்கள் என்றால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயர் என்ன?

# இந்திய கலாசார நிலையம்!

- அலசுவது இராஜதந்திரி -

இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட இந்திய கலாசார நிலையம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு மிக அண்மையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்கலாசார மண்டபம் குறித்து தற்சமயம் பலதரப்பட்ட ஊகங்களும் வெளியாகிவந்த வண்ணமுள்ளன. ஆனால், யாழ்ப்பாண கலாசார மையமென்பது ஆழ வேரூன்றிய யாழ்ப்பாணத்திற்கும் இந்தியாவுக்குமிடையிலான தொடர்பையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

இசைப்புலவர் காலஞ்சென்ற என். சண்முகரத்தினம் யாழ்ப்பாண இளம் கலைஞர் மத்தியில் இசை ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஓர் இசைப் பயிற்சிநெறியை ஏற்பாடு செய்திருந்தார். இப்பயிற்சி நெறி 1959ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்தது.

அப்போது, யாழ்ப்பாணத்தின் இளம் கலைஞர்கள் பலரும் அந்த இசைப் பயிற்சி நெறியில் பங்குபற்றியிருந்தனர். அந்த இசைப் பயிற்சி நெறியை நடத்தியவர் வேறுயாருமல்லர் தமிழக இசைத்துறையிலே கர்நாடக சங்கீதத்திலும் பக்தி இசையிலும் தமக்கென ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தியிருந்த சீர்காழி கோவிந்தராஜனின் குருவான திருப்பாம்பரம் சுவாமிநாதபிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இசையமர்வில் அன்றைய இளம் கலைஞர்களான லக்ஷ்மி தேவி பாலகிட்ணர், சத்தியபாமா ராஜலிங்கம், அரியாலையைச் சேர்ந்த இசை ஆசிரியர் சி. பாலசிங்கம் மற்றும் டாக்டர் நளாயினி பசுபதி, நாகம்மா கதிர்காமர், நாகேஸ்வரி பிரம்மானந்தா ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். அத்துடன், பிரபலமான சட்டத்தரணி சி. சுந்தரலிங்கத்தின் புதல்வாரன எஸ். சத்தியலிங்கம், இசைக் கலைஞர் ராம் குமாரசுவாமி, பரம் தில்லை ராஜா ஆகியோர் உட்பட அக்காலத்தின் இளங்கலைஞர்கள் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

இந்திய கலாசார நிலையமென்பது இன்றைய சந்ததியினரைப் பொறுத்தவரை ஒரு நிறுவன ரீதியான புதிய கட்டமைப்பாகத் தென்படலாம். ஆனால், யாழ். மண்ணோடு இந்திய கலாசாரம் என்பது ஆழவேரூன்றியதாகவே இருக்கின்றது.

இந்திய கலாசாரத்தின், குறிப்பாக தமிழக கலையுணர்வின் பிரதிபலிப்பாக யாழ்ப்பாணத்தில் மிகவும் உன்னதமான இந்திய இசைக் கலைஞர்கள் தமது இசை புலமைத்து வத்தை கடந்த காலங்களில் வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாண மண்ணோடு எம். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மா, டி. கே. பட்டம்மாள் அம்மா, சீர்காழி கோவிந்தராஜன் போன்ற மாபெரும் கலைஞர்கள் உட்பட ஏராளமான இசைக்கலைஞர்கள் யாழ். மண்ணோடு தமது உறவுகளை வைத்திருந்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் ஏராளமான முன்னணி கர்நாடக இசைக்கலைஞர்கள் கூட தமிழகம் சென்று அங்குள்ள இசைக்கல்லூரிகளில் பயின்று தமது திறமைகளை வளர்த்து அபரிமிதமான முறையிலே தமது இசைப்பங்களிப்பை வளங்கியிருந்தனர்.

இதுதவிர, "தேரோடும் மண்ணில் நல்ல ஏரோடும்" என்ற சீர்காழி கோவிந்தராஜனின் பாடலுக்கு அமைவாக யாழ்ப்பாணத்தின் ஆலயங்கள் மற்றும் கலைக்கூடங்கள் அனைத்திலும் இந்திய சிற்ப மற்றும் ஓவிய விற்பன்னர்களின் செல்வாக்கு செறிந்துள்ளமையை அவதானிக்கமுடியும்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களில் காணப்படும் கட்டட அமைப்புக்கள் மற்றும் திராவிட கலையம்சங்களோடுகூடிய கோபுரங்கள், சித்திரத்தேர்கள் என்பவற்றில் தமிழக கலை கலாசார அம்சங்கள் பிரதிபலிப்பதையே அவதானிக்கமுடியும்.

இந்திய கலாசார நிலையம் யாழ்ப்பாணத்தில் தற்போது அழகுற நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், இதற்கு முன்பதாக உலகத்தின் கவனத்தை ஈர்த்த யாழ்ப்பாண பொதுசன நூலக நிலையம் தமிழக அரச கட்டடக்கலைஞர் நரசிம்மனால் வடிவமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் புதிதாக அமையப்பெறுகின்ற இந்திய கலாசார நிலையம் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையுமென்பதில் எவ்வித சந்தேகங்களுக்கும் இடமில்லை. இக்கலாசார நிலையம் யாழ்ப்பாண மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

யாழ்ப்பாணத்தில் மனோகரா தியேட்டரில் எம். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மா இசை நிகழ்ச்சியை வழங்கியதை இன்றும்கூட யாழ்பாண மக்கள் நினைவுகூர்ந்து வருகின்றனர்.

இதுதவிர, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சித்தார் கலைஞர் ரவிசங்கர் இசைநிகழ்ச்சி வழங்கியதையும் அம்மண்டபத்திலே நான்காவது உலக தமிழாராச்சி மாநாடு இடம்பெற்றபோது இந்திய அறிஞர்கள் பலரும் பங்குபற்றி சிறப்பித்ததுகூட பசுமையான நினைவாகவே இருந்து வருகின்றது. அத்துடன் சுட்டிபுரம் அம்மன் கோயில் சுற்றாடலில் சீர்காழி கோவிந்தராஜன் வழங்கிய இசை நிகழ்ச்சியையும் இன்றுவரை யாழ்ப்பாண மக்கள் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

இந்திய கலாசார மண்டபம் யாழ்ப்பாண மண்ணுக்கும் இந்திய மண்ணுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை மேலும் பலமாக்குவதாக அமையுமென்றே கருதமுடியும். யாழ்ப்பாண மக்களைப்பொறுத்தவரை இத்தகையதொரு கலாசார மண்டபம் இன்றியமையாததாகவே இருக்கின்றது. ஏனெனில், எதிர்கால சந்ததியினர் மத்தியிலே இந்திய மற்றும் யாழ்ப்பாண மக்களிடையேயான கடந்தகால ஏமாற்றங்கள் மற்றும் தப்பபிப்பிராயங்கள் என்பவற்றைக்கூட நீக்கி ஒரு புதிய பாதையில் இந்திய மற்றும் யாழ்ப்பாண மக்களிடையேயான உறவுகளை பலப்படுத்துவதாகவே இந்த கலாசார நிலையம் அமையுமென்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒக்ரோபர் - 05 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 19

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 3.00 - 4.30 |
| திதி | : | சதுர்த்தசி |




**மேடம்**
செலவு வருவதற்கு முன்பாகவே வரவு வந்து நிம்மதி தரும். கையிருப்பு கூடுதலாகும். சொத்துக்கள் மூலம் வருமானம் வரும். குடும்பத்தில் கடன் தொல்லை தீரும். உற்சாகமான நாள்.

**இடபம்**
அதிக வேலை இருந்தாலும் அதிக மகிழ்ச்சி உண்டு. மற்றவர் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டியதிருக்கும். வியாபாரிகள் கூடுதலாக பணிபுரிந்தால் இலாபம் கூடும்.

**மிதுனம்**
புதியவர்களுடன் பணியாற்றும்போது கவனமாக இருங்கள். சிலருக்கு எதிர்பாராத செல்வம் சேர்வது பற்றிய செய்தி வரும். யாருடனும் வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம்.

**கடகம்**
உதவியாளர்களின் ஒத்துழைப்புடன் முக்கிய பணியை முடிப்பீர்கள். இளைஞர்கள் முன்னேற்றப் பாதையில் கவனம் செலுத்துவீர்கள். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம்.

**சிம்மம்**
உடல்நலம் பாதித்த உறவினருக்கு நன்மை செய்வீர்கள். உயர்பதவியில் உள்ளவரை அவரது இருப்பிடம் சென்று பார்ப்பீர்கள். சிலருக்கு பதவி உயர்வும், பொறுப்புகளும் கிடைக்கும்.

**கன்னி**
அவசரம் கருதி சில விஷயங்களை முடிக்க வேண்டி வரும். முன்பு ஏற்பட்ட மனக்குறை ஒன்று அகலும். பரபரப்பான நாள். எதிர்பாராத செலவுகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
நல்ல நண்பர்களின் உதவியை நாடி வெற்றி காண்பீர்கள். அலுவலக பணிகளை விரைவாக முடித்து மகிழ்ச்சி அடைவீர்கள். மனதில் அமைதி நிலவும். குழந்தைகளால் பெருமிதம் ஏற்படும்.

**விருட்சிகம்**
உறவினர் வீட்டு விசேஷங்களுக்கு உதவி செய்வீர்கள். நண்பர்கள் மூலம் சில நன்மைகளைப் பெறுவீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படும். உங்களின் உழைப்புக்கு நற்பலன் கூடும்.

**தனுசு**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த முயற்சி செய்வீர்கள். தளர்வடைந்த விஷயம் ஒன்று தக்க நபரின் உதவியால் முடியும். பிறருடைய குடும்ப விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**மகரம்**
பணியில் மிகுந்த கவனத்துடன் இருப்பது நல்லது. நவீன கருவிகளை உபயோகிப்பீர்கள். கற்பனை பயம் வரும். சிறு சிறு கடன் தொல்லை இருந்தாலும் பாதிப்பு இருக்காது.

**கும்பம்**
சமாளிக்கும்படியான சிறு பிரச்னை ஒன்று ஏற்பட்டு விலகும். தடுமாற்றம் உண்டாகாத தன்னம்பிக்கை தேவை. பேச்சில் நிதானம் அவசியம். வேலைகளில் அதிக கவனத்துடன் செயலாற்ற வேண்டும்.

**மீனம்**
குடும்பத்தில் ஏற்படும் பிரச்னையை எளிதாக சமாளிப்பீர்கள். நிதானப்போக்கில் நன்மைகள் வரும். மனத்தெளிவு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். பழைய நண்பர் ஒருவரை சந்திப்பீர்கள்.

# எழுவர் விடுதலை விவகாரத்தில் ஆளுநர் மீது நளினி தொடர்ந்த வழக்கு ஒத்திவைப்பு

சென்னை, ஒக். 05

தமிழக ஆளுநருக்கு எதிராக ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் நளினி தொடர்ந்த வழக்கில் தமிழக அரசு பதில் அளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஒத்திவைத்தனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், நளினி உள்பட 7 பேரை விடுதலை செய்ய வலியுறுத்தி கடந்த 9-9-2018 அன்று தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இந்த தீர்மானம் தமிழக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆளுநர் இதுவரை எந்த முடிவும் எடுக்காமல் உள்ளார். இந்த நிலையில் தமிழக ஆளுநருக்கு எதிராக நளினி, சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார். அதில் 7 பேர் விடுதலை விவகாரத்தில் ஆளுநர் முடிவு எடுக்காமல் இருப்பது நீதிமன்ற அவமதிப்பு மற்றும் அரசியல் சாசனத்துக்கு எதிரானதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி, நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது நளினி வழக்கில் தமிழக அரசு பதில் அளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# ‘நீட்’ தேர்வை இல்லாதொழிப்பதற்கு இணைந்து செயல்பட முன்வாருங்கள்

## 12 மாநில முதலமைச்சர்களுக்கும் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஒக். 05

நீட் தேர்வுக்கு எதிராக 12 மாநில முதலமைச்சர்களுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். நீட் தேர்வை இல்லாதொழிப்பதற்கு அவர்களுடைய ஆதரவையும் அவர் கோரியுள்ளார்.

தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் கூறப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்) அடிப்படையிலான சேர்க்கை செயல்முறை, சமூகத்தில் பின்தங்கிய மாணவர்களை பாதித்துள்ளதா என்பதை ஆய்வு செய்ய தமிழக அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி ஏ.கே. ராஜன் குழு சமர்ப்பித்த அறிக்கையை இணைத்து அனுப்புவதாக, அக்கடிதத்தில் முதல்வர்



குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் மாற்று சேர்க்கை நடைமுறைகள், அத்தகைய மாற்றுவழிகளைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் அத்தகைய நியாயமான மற்றும் சமமான முறைகளைச் செயல்படுத்த எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பரிந்துரைக்குமாறு அக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நீதிபதி ஏ.கே.ராஜன் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், சமீபத்தில் தமிழக சட்டப்பேரவையில் “தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை சட்டம், 2021” என்ற சட்ட முன்வடிவினை நிறைவேற்றியுள்ளதாகவும், அந்தச் சட்ட முன்வடிவின் நகலையும் இக்கடிதத்துடன் இணைத்து அனுப்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நமது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளபடி, கல்வித் துறையை நிர்வகிப்பதில் மாநில அரசுகளின் முதன்மையை மீட்டெடுக்க மாநில முதல்வர்கள் அனைவரும் ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்த முக்கியமான பிரச்னையில் அனைவரது ஒத்துழைப்பையும் தான் எதிர்நோக்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோவில்களை திறக்கக்கோரி தமிழகம் முழுவதிலும் பா. ஜ. க. ஆர்ப்பாட்டம்

## பொது மக்களையும் பங்கேற்க அண்ணாமலை அழைப்பு

சென்னை, ஒக். 05

வாரத்தில் வெள்ளி,சனி, ஞாயிற்று ஆகிய கிழமைகளில் கோவில்களை திறக்கக்கோரி தமிழ்நாடு முழுவதும் பா.ஜ.க. நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தமிழ்நாட்டில் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் உள்பட அனைத்து மதவழிப்பாட்டு தலங்கள் திறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வெள்ளி, சனி, ஞாயிற்று கிழமைகளில் கோவில்களை திறக்கக்கோரி தமிழ்நாடு முழுவதும் நாளை மறுதினம் பா.ஜ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என பா.ஜ.க. அறிவித்துள்ளது. கோவில்களை திறக்கக்கோரி பா.ஜ.க. நடத்தும்



ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று அண்ணாமலை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தவறான தேர்தல் வியூகம்தான் அ.தி.மு.க.வின் தோல்விக்கு காரணம்

## கூறுகிறார் பன்னீர்செல்வம்

விழுப்புரம், ஒக். 05

தமிழக சட்டசபை தேர்தல் தோல்விக்கு தவறான வியூகமே காரணம் என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் வரும் 6 மற்றும் 9 ஆகிய நாட்களில் நடைபெற உள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக அ.தி.மு.க. சார்பில் வேட்பாளர் அறிமுக கூட்டம் மற்றும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், மக்கள் மத்தியில் அ.தி. மு.க.வுக்கு நல்ல பெயர் உள்ளது. ஆனால் தி.மு.க.வினருக்கு அப்படி இல்லையென கூறினார்.

# ஜப்பான் புதிய பிரதமருக்கு பிரதமர் மஹிந்த வாழ்த்து

கொழும்பு, ஒக். 05

ஜப்பானின் புதிய பிரதமராக நேற்று பதவியேற்ற புமியோ கிஷிடாவுக்கு இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் புதிய பிரதமர் புமியோ கிஷிடாவுக்கு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இணைந்து பணியாற்ற எதிர்பார்க்கிறேன் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

# அனில் ஜாசிங்கவை விமான நிலையத்தில் நிறுத்தினர் விமான நிலைய அதிகாரிகள்!

கொழும்பு, ஒக். 05

ஐக்கிய நாடுகள் சுற்றாடல் மாநாட்டில் பங்கேற்பதற்காக தென் கொரியா செல்வதற்காக நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்ற விசேட மருத்துவர் அனில் ஜாசிங்கவை விமானத்தில் பயணிக்க அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.

கொவிட் தடுப்பூசியை செலுத்திக்கொண்டமைக்கான அட்டையை எடுத்து வராத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் குறித்த அட்டையின் புகைப்படம் ஒன்றை வட்ஸ்அப் ஊடாக பெற்றுக் கொண்டு அதனை காண்பித்த பின்னர் அவருக்கு பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

# இந்திய உதவியில் நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகள் வவுனியாவில் கையளிப்பு

வவுனியா, ஒக். 05

இலங்கை இந்திய நட்புறவு திட்டத்தின் கீழ் வவுனியாவில் நிர்மானிக்கப்பட்ட வீடுகள் நேற்றுத் திங்கட்கிழமை பயனாளர்களிடம் கையளிக்கப் பட்டது.

இலங்கை இந்திய நிதி உதவி வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ்  கீழ் வவுனியா மாவட்டத்தில் 100 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் அருணோதய நகரில் பூர்த்தி செய்யப்பட்ட 24 வீடுகள் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு பயனாளர்களுக்கு கையளிக்கப் பட்டன.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதிகளாக கலந்துகொண்ட வீடமைப்பு மற்றும் கட்டட நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுரத்த, இந்திய துணை தூதுவர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோர் வீடுகளை திறந்து வைத்தனர்.




குறித்த வீடுகள் இந்திய நிதியுதவியின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கே.கே.மஸ்தான், கு.திலீபன், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் துமிந்த செல்வா, மற்றும் அரச உயர் அதிகாரிகள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# எண்ணெய் குதங்களை பார்க்கவே இந்திய வெளியுறவு செயலர் வந்தார்

## ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.05

**இந்திய வெளிவிவகார செயலாளர் இந்நாட்டின் எண்ணெய்க் குதங்களைப் பரிசோதனை செய்யும் நோக்கத்தில் வந்துள்ளார் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**



இந்திய வெளிவிவகார செயலாளர் திருகோணமலைக்குச் சென்று எண்ணெய்க் குதங்களைப் பரிசோதனை செய்ததன் நோக்கம் மோசடியாக வர்த்தக நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவே எனவும் அவர் கூறினார்.

கேகாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் மீதமுள்ளதைக் கையகப்படுத்தும் நோக்கில்தான் அவர் நாட்டுக்கு வந்துள்ளார். எஞ்சியுள்ள 85 எண்ணெய்க் குதங்களையும் இந்தியாவிடம் ஒப்படைக்க அரசாங்கம் முயற் சிக்கின்றது.

நாட்டின் சொத்துக்களை இவ்வாறு கொள்ளை விலையில் விற்பனை செய்வதற்கு தற்போதைய ஆட்சியாளருக்கு உள்ள உரிமை என்ன?

இந்த நடவடிக்கை மிகப் பெரியதொரு பாவச் செயல், தூர நோக்கற்ற ஏதேச்சதிகார செயலாகும். தேசிய சொத்துக்கள் கொள்ளை யிடப்படுவதற்கு எதிராக மக்கள் அணி திரளவேண்டும்.

எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அரசாங்கம் இந்த விடயங்களைச் செவி சாய்ப்பதில்லை. எதிர்காலத்தில் ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு இல்லை என்றே நினைக்கின்றேன். சோமாலியா, ஆப்கானிஸ் தான் மற்றும் எத்தியோப்பியா வுக்கு நேர்ந்த நிலைமையே இலங்கைக்கும் நேரிடும்-என்றார்.



# நல்லிணக்கபுரத்தில் வசிக்கும் 175 குடும்பங்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஒக் 05

கொரோனா காரணமாக வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ள கீரிமலை, நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 175 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளையின் நிதியுதவியுடன் கீரிமலை சர்வமத ஆன்மீக அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நல்லிணக்கபுரம் பொது மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் அந்தப் பகுதி கிராம சேவையாளர், தெல்லிப்பழைப் பிரதேச நிர்வாகக் கிராம அலுவலர், இலங்கை வங்கியின் கோப்பாய் கிளை முகாமையாளர்,

வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளை, கீரிமலை சர்வமத ஆன்மீக அறக்கட்டளை ஆகியவற்றின் நிர்வாகிகள் கலந்துகொண்டு நிவாரணப் பொதிகளை வழங்கினர்.

# சாட்சி இல்லாவிட்டால் ரிஷாத்தை உடன் விடுதலை செய்யவேண்டும்

## ரணில் சபையில் கோரிக்கை

கொழும்பு, ஒக். 05

ரிஷாத் பதியுதீன் எம்.பி. மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குச் சாட்சி இல்லாவிட்டால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க சபையில் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 இல் நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

ரிஷாத் பதியுதீன் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டு தொடர்பில் சாட்சி இருக்குமாக இருந்தால் அதனை சமர்ப்பிக்க வேண்டும். சாட்சி இல்லாவிட்டால் அவர் மீதான விசாரணை நிறைவு செய்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிய சாட்சிகள் இருந்தால் அதனை உறுதிப்படுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்லவேண்டும்-என்றார்.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக சபாநாயகர் பதிலளித்தார்.

# பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 05

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச் சாட்டில் , வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊரெழு பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவர் தலைக்கவசமின்றி ஆபத்தான முறையில் பயணித்துள்ளனர்.

அவர்களை வழிமறித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை வாங்கி தண்டனைப் பத்திரம் எழுத முற்பட்டபோது அங்கு வந்த பிரதேச சபை உறுப்பினர் பொலிஸாருடன் முரண் பட்டார்.

அவரின் நடவடிக்கை எல்லை மீறிச் சென்றதனால் பொலிஸ் உத்தியோகத்தர் வானத்தை நோக்கி இரண்டு தடவை சூடு நடத்தி எச்சரித்தார்.

அதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற் பட்டது.

இந்நிலையில் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட மூவரையும் தமது கடமைக்கு இடையூறு விளைவித்தனர் எனும் குற்றச்சாட்டில் பொலிஸார் நேற்று காலை கைது செய்துள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலும் ஏனைய இருவரும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் விசாரிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் தன்னை ஈ.பி.டி.பி கட்சி என அறிமுகப்படுத்தி பல தடவைகள் பொலிஸாருடன் முரண்பட்டு கடமைக்கு இடையூறு விளைவிப்பவர் என்றும் பொலிஸார் கூறினர்.

# 3000 பாடசாலைகளை இம்மாதம் திறப்பதற்கு ஏற்பாடுகள் தீவிரம்

கொழும்பு, ஒக். 05

பாடசாலைகளை திறப்பது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கு அமைய, பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கல்வி அமைச்சர் மாகாண ஆளுநர்களுக்கு அறிவித்துள்ளார்.

சுமார் 3000 பாடசாலைகள் இந்த மாதத்தில் திறக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இதற்கமைய, மீள திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் சூழல், வகுப்பறை, கதிரைகள், உபகரணங்களை சுத்தம் செய்தல் மற்றும் புனரமைத்தல் தொடர்பில் ஆளுநர்களின் தலையீட்டில் வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

200 இற்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவையும் 100 இற்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் அனைத்து வகுப்புகளினதும் கல்வி நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில மதிப்பீடுகளுக்கு அமைய சுமார் 3000 பாடசாலைகள் இந்த மாதத்தில் திறக்கப்படவுள்ளன என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் எந்தவித பிளவும் இல்லை

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஒக். 05

**ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித பிளவும் இல்லை. கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் நாம் ஓரணியாகவே பயணிக்கின்றோம். இனியும் பயணிப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து அணிகளாக பிரிந்து செயல்படுவதால் கட்சிக்குள் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், சஜித் பிரேமதாஸவின் தன்னிச்சையான முடிவுகளே இதற்கு காரணம் எனவும் தகவல் வெளியாகின.

அத்துடன், சஜித் அணியிலுள்ள உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடனும், மேலும் சிலர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான '43' எனும் அரசியல் இயக்கத்துடனும் இணைந்து பயணிக்கவுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் இது தொடர்பில் வினவியபோதே திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேற்படி தகவல்களை கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற வகையில் அடியோடு நிராகரிக்கின்றேன். கட்சிக்குள் உள்ளக மோதல் எதுவும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி என்பது அரசியல் கூட்டணியும் ஆகும். மாறுபட்ட கருத்துகளை உடையவர்கள் இருக்கலாம். கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம். இது அடிப்படை ஜனநாயகப் பண்பு. இதனை



பிளவு, மோதல் எனக் கூறமுடியாது.

கட்சி தாவல் இடம்பெறவுள்ளது எனக்கூறப்படுவதும் பொய். நாம் ஓரணியாக பயணிக்கின்றோம். இனியும் பயணிப்போம்-என்றார்.

# மிகுந்த அவதானத்துடன் மக்களே செயல்படுங்கள்

## இராணுவத் தளபதி கோரிக்கை



கொழும்பு, ஒக். 05

நாடு முழுமையாக திறக்கப்பட் டுள்ள நிலையில், கொரோனா அச்சுறுத்தலை கருத்திற் கொண்டு பொதுமக்கள் மிகுந்த அவதானத் துடன் செயல்படுமாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் மற்றுமொரு கொரோனா அலை உருவாவதைத் தடுப்பதற்காக பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவேண்டியது அவசியம் எனவும் இராணுவத்தளபதி மேலும் குறிப்பிட்டார். ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

# ரயில் சேவையில் ஆண்டுக்கு ஒரு பில்லியன் ரூபாய் நட்டம்!

## கூறுகிறார் திலும் அமுனுகம



கொழும்பு, ஒக். 05

ரயில் சேவை ஆண்டுதோறும் சுமார் ஒரு பில்லியன் ரூபாய் நட்டத்தை எதிர்கொள்கிறது. ரயில் சேவையை பராமரிக்க ஆண்டுதோறும் 1.8 பில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது, ஆனால் வருமானமாக 800 மில்லியன் ரூபாயே கிடைக்கப் பெறுகிறது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இந்த தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்காலத்தில் ரயில் சேவையில் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சின் ஆலோசனையின் கீழ் பல மாற்றங்களை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

எதிர்காலத்தில் பொருட்கள் ரயில் சேவையை மேம்படுத்தவும், தற்போதுள்ள ரயில் சாலை அமைப்பு பொருத்தமான திட்டத்தில் இல்லாததால் அதிக கனமான பெட்டிகளை கொண்டு செல்லும் வகையில் ரயில் தண்டவாளங்களை சீரமைக்கவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் இரண்டு புதிய சொகுசு ரயில்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று கண்டி-கொழும்பு வழித்தடத்தில் சேர்க்கப்படும்-என்றார்.

# தடுப்பூசி பெறாதவர்களை அனுமதிக்காமை குறித்து விளக்கம் கோரியுள்ளது மனித உரிமை ஆணைக்குழு

வவுனியா, ஒக். 05

வவுனியா பிரதேச செயலகத்தினுள் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களை மாத்திரமே அனுமதிக்க முடியும் என பிரதேச செயலர் அறிவித்துள்ள நிலையில், அது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வடமாகாண இணைப்பாளர் த. கனகராஜ் எழுத்து மூலமான விளக்கம் கோரியுள்ளர் என அறிய முடிகிறது.




வவுனியா பிரதேச செயலகத்தினுள் சேவை பெற வருவோர் அடையாள அட்டையையும், தடுப்பூசி அட்டையையும் கைவசம் வைத்திருக்கவேண்டும் என்றும், தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதோர் பிரதேச செயலகத்தினுள் அனுமதிக்கப்பட்ட மாட்டார்கள் எனவும் அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

அது தொடர்பில் சமூக ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், மனித உரிமை ஆணைக்குழு பிரதேச செயலாளரிடம் அது தொடர்பில் எழுத்து மூலமான விளக்கம் கோரியுள்ளது. (அ-3)

# ஈஸ்டர் தின தாக்குதல் குறித்து வழக்கு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக். 05

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய 24 சந்தேக நபர் களுக்கு எதிராக தாக்கல் செய் யப்பட்டிருந்த வழக்கு உயர் நீதிமன்றத்தினால் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை இலக்கு வைத்து கடந்த 2019ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட இந்த குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

அதற்கமைய, சந்தேகநபர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த குற்றப்பத்திரிகையும் நேற்று சமர்ப்பிக்கப் பட்டது.

இந்நிலையில், அடுத்த கட்ட விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பட்ஜெட் கூட்டத்தொடருக்கு பின்பே அமைச்சரவை மாற்றங்கள் நிகழும்

கொழும்பு, ஒக். 05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் அமைச்சரவை மறுசீரமைக்கப்படவுள்ளது என ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்த நிலையில், வரவு-செலவுத் திட்ட கூட்டத்தொடர் நிறைவடைந்த பின்னரே அமைச்சரவை மறுசீரமைக்கப்படும் என தெரியவருகின்றது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார்.

ஆளுங்கட்சி குழுக் கூட்டம் மற்றும் அமைச்சரவைக் கூட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

அமைச்சரவை மறுசீரமைப்புக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பத்தில் எதிர்ப்பு வெளியிட்டிருந்தாலும் தற்போது பச்சைக்கொடி காட்டியுள்ளார். இதனால் அமைச்சரவை மாற்றம் உறுதியாகியுள்ளது.

முக்கியமான சில அமைச்சுப் பதவிகள் மாறவுள்ளதுடன், ஏனைய சிலரின் அமைச்சுப் பதவிகள் கைமாறவுள்ளன.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு 7 ஆம், 8ஆம் திகதிகளில் தடுப்பூசி

கொழும்பு, ஒக். 05
சகல பல்கலைக்கழக மாண வர்களுக்கும் எதிர்வரும் 07 ஆம், 08 ஆம் திகதிகளில் கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளனவென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, மாணவர்கள் தாம் வசிக்கும் பிரதேசத்துக்கு அருகிலிருக்கும் பல்கலைக்கழ கங்களுக்குச் சென்று தடுப்பூசி களைப் பெற்றுக்கொள்வதற் கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அதன் பின்னர் பல்கலைக் கழகங்களை மீண்டும் திறப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட் டது. (அ)

## "இந்திய நிறுவனத்துடனான உடன்படிக்கை; புதுப்பிப்பது குறித்து தீர்மானிக்கவில்லை"

இந்திய எண்ணெய் நிறுவ னத்துடனான உடன்படிக்கையை நீடிப்பது குறித்து எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு செயலாளர் நேற்று திருகோணமலையில் அமைந் துள்ள இந்திய எண்ணெய் நிறு வனம் பயன்படுத்தும் சுமார் 20 எண்ணெய் குதங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

ஏற்கனவே கைச்சாத்திடப் பட்ட இந்திய எண்ணெய் நிறு வனத்துடனான உடன்படிக்கை 2024 ஆம் ஆண்டளவில் முடி வுக்கு வரவுள்ளது.

எனவே குறித்த ஒப்பந் தத்தை நீடிப்பது குறித்து இன் னும் முடிவு எடுக்கப்பட வில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

# மாகாண சபை தேர்தலை பிற்போடும் எண்ணமில்லை

### இராஜாங்க அமைச்சர் ரொஷான் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 05
மாகாண சபை தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசாங் கத்துக்கு ஒருபோதும் கிடையா தென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இரா ஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தல் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

கடந்த மார்ச் மாதமளவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டது.எனினும் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாகவே தேர்தல் தொடர்பில் கவனம் செலுத்த முடியவில்லை.

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் எதிர் வரும் நவம்பர் மாதம், பாரா ளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படவுள்ளது. அதன்பின்னர் மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்து நாடாளுமன்றத்தில் தீர்க்கமாக தீர்வு எடுக்கப்படும்-என்றார்.

# மன்னாரில் கடும் மழை: இயல்பு நிலை பாதிப்பு!

மன்னார், ஒக். 05
மன்னாரில் சில தினங்களாக தொடர் மழை பெய்து வரும் நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கடும் மழை பெய் துள்ளது.

இதனால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சாந்திபுரம், சௌத்பார், ஜிம்றோண் நகர் உள் ளிட்ட சில கிராமங்களில் உள்ள தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளமையினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.மேலும் மாவட்டத்தின் ஏனைய பகுதிக ளிலும் பெய்த கடும் மழை கார ணமாக ஆங் காங்கே வெள்ள நீர் தேங்கியுள்ளது.

# தற்போது உள்ள இயல்புநிலைமையை உதாசீனம் செய்யாது செயற்படுங்கள்

### யாழ். அரசாங்க அதிபர் கோரிக்கை



**யாழ்ப்பாணம், ஒக்.05**
**தற்போதுள்ள இயல்புநிலையை உதா சீனம் செய்யாது சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அவதானமாக செயல்படுங்கள் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித் துள்ளார்.**

நேற்று யாழ்.மாவட்ட செய லகத்தில் நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

யாழ். மாவட்டமானது பொது முடக்கத்தின் பின்னர் சற்று இயல்பு நிலைக்கு திரும் பியுள்ளது. தற்போது மாகா ணங்களுக்கிடையிலான போக் குவரத்து மாத்திரமே தடைப்ப ட்டுள்ளது.

மாவட்டத்துக்குட்பட்ட போக்குவரத்துக்கள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. தனியார்துறை யினரும் அதேபோல இலங் கைப் போக்குவரத்துச் சபை யினரும் தங்கள் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்குட் பட்ட மாவட்டங்களுக்கிடை யிலான சேவைகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

அதே நேரத்தில் அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகள் மட்டுப்பாடுகளுடன் ஏனைய செயற்பாடுகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. கல்விச் செயல் பாடுகள் தவிர்ந்த ஏனைய செயல்பாடுகள்யாவும் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

அதேநேரத்தில் தனியார் கல்வி செயல்பாடுகளுக்கு தற் காலிகமாக தடை விதிக்கப்பட் டுள்ளது. 200க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் மாகாண கல்வியமைச்சு மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் அதற் குரிய ஏற்பாடுகளும் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் ஒன்றுகூடும் செயல்பாடுகள் யாவும் நிறுத் தப்பட்டுள்ளன. அதேபோல பொது நிகழ்வுகள் மற்றும் குடும்ப நிகழ்வுகளுக்கு சில கட் டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் தளர்த்தப்பட்டுள்ள காலத்தில் கடந்தகாலங்களில் ஒப்பிடும் போது தொற்று நிலைமை அதிகரித்த நிலை காணப்பட்டது.

எனவே, தற்போதுள்ள இயல்புநிலையை பொதுமக்கள் உதாசீனம் செய்யாது சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொதுமக்கள் அவதானமாக செயல்படவேண்டும்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் கட்டுப்பாடுகளோடு செயல் படுவதன் மூலம் எதிர்வரும் காலங்களில் இந்த பொது முடக்கத்திற்கு செல்லாது நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இந்துக்களின் நவராத்திரி விரதம் அடுத்த வாரம் ஆரம்ப மாகவுள்ளது. எனவே பொது மக்கள் கட்டுப்பாடுகளை மீறாது தமது வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும் .

அத்தோடு பொதுமக்கள் தங் களை பாதுகாப்பதோடு தங்க ளுடைய சமூகத்தையும் பாது காப்பது மிகவும் முக்கியமானது.

எனவே ஏற்கனவே நமக்கு பொது முடக்கம் தொடர்பான அனுபவம் உள்ளது எனவே மீண் டும் ஒருபோதும் பொது முடக் கத்துக்கு வழிவகுக்காது இயல் பான நிலையினை பேணுவ தற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்-என்றார்.

# யாழில் கட்டுமான தேவைகளுக்கு மணலை பெறுவதில் பெரும் சிரமம்

### யாழ். மாவட்ட செயலகத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக். 05
யாழ். மாவட்டத்தில் கட்டு மானத் தேவைகளுக்கு மணலை பெறுவதில் உள்ள சிக் கல்நிலை தொடர்பில் நேற்று திங்கட் கிழமை யாழ்.மாவட்ட செயல கத்தில் விசேட கலந்து ரையா டல் ஒன்று இடம்பெற்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடை பெற்ற குறித்த கலந்துரையாட லில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர், பிரதேச செயலர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் கருத்துரைத்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்.

யாழ். மாவட்டத்திலே கட் டுமானத்தேவைக்காக மணல் பெறுதில் பல்வேறுபட்ட இடைஞ்சல்கள், சிக்கல்கள் காணப்படுகின்றன.

அத்தோடு மணல் விலையும் அதிகரித்து காணப்படுகின்றது. அத்தோடு சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுகின்றது. நாங்கள் பலதரப்பட்ட கூட்டங் களை நடத்தி சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்துள் ளோம். அதனடிப்படையில் மருதங்கேணிப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மணல் திட்டுக்களில் ஒரு குறிப்பிட்ட வற்றை சூழலை பாதிக்காத வாறு பெற்று அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தனியார் கட்டுமானத் திட்டங்களுக்கும் பயன்படுத்த ஏற்பாடுகளை முன் னெடுத்துள்ளோம்.

இதிலே காணப்பட்ட பல விடயங்கள் தொடர்பில் சம்பந் தப்பட்ட தரப்பினருடன் ஆராய்ந்து அதன் அடிப்படை யில் இவற்றை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மாவட்ட செயலகம், மருதங்கேணி பிரதேச செயல கம் மற்றும் அதனுடைய தொடர்புடைய திணைக்களங் கள் மற்றும் அந்த கிராமங்களில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கம்,பாரவூர்திச் சங்கம் ஆகி யவற்றுடன் இணைந்த வகை யில் இந்த மணலை பெற்று பயன்படுத்தக்கூடிய ஒரு பொறிமுறையையும் அதற்குரிய திட்டங்களையும் ஏற்பாடு செய்துள்ளோம்-என்றார். (அ)

# அம்பன்பொலவில் கிராமசேவகர் கொடூரமாக வெட்டி கொலை!

கொழும்பு, ஒக். 05
அம்பன்பொல தெற்கு கிராம உத்தியோகத்தர் கூரிய ஆயுதங் களால் தாக்கப்பட்டு நேற்று கொலை செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பன்பொல பிரதேச செய லர் பிரிவில் கடமையாற்றிய எஸ்.எம். கபில பிரியந்த என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப் பட்டார்.

அவர் வெட்டுக்காயங்க ளுக்கு உள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கிராம உத்தியோகத்தரை, காரில் பய ணித்த சிலர் தாக்கிவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள் ளனர். காரின் இலக்கத்தகடு அடையாளம் காணப்பட்டுள்ள துடன், சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விரிவான விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# யானைகளின் அட்டகாசத்தால் அச்சத்தில் கிளிநொச்சி மக்கள்

கிளிநொச்சி, ஒக். 05
கிளிநொச்சி- கல்மடுநகர் பகு திக்கு வருகை தரும் யானைகள், பயன்தரக்கூடிய பயிர்களை அழித்து பாதிப்பு ஏற்படுத்துவ தாக மக்கள் கவலை வெளியிட் டுள்ளனர்.

தினமும் இரவு வேளைக ளில், மக்கள் குடியிருப்புகளுக் குள் வரும் யானைகள் இவ் வாறு பயன்தரக்கூடிய பயிர் களை அழித்துவருகின்றன என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

ஈழநாடு





"தமிழர் பிரசினையை ஒரு முடிவுக்கு கொண்டுவரவேண்டியது இந்தியாவுக்கு முக்கியமானது என்பதை இலங்கை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இலங்கை அரசாங்கமும் தமிழ் அரசியல் சமுதாயமும் பேச்சு மேசைக்கு வரத்தயாரென்றால், இது விடயத்தில் இந்தியா அதன் நல்லெண்ணங்களை பயன்படுத்தவும் கூடும்.

**கேணல் ஆர். ஹரிஹரன்**



# மொறகொட கூறுவதை சாதிப்பதற்கு இலங்கை செய்ய வேண்டியவை என்ன?

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 76 ஆவது கூட்டத்தொடரில் செப்ரெம்பர் 22 நிகழ்த்திய உரை ஐ.நா.வில் அவரின் முதன்முதலான உரையாக அமைந்தது. தனது நாட்டில் நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கம் பற்றி அவர் பேசினார். ஆனால், போருக்கு பின்னரான நல்லிணக்கம் குறித்து புலம்பெயர் இலங்கை தமிழர்களுடன் பேசத்தயாராக இருப்பதாக ஐ.நா.செயலாளர் நாயகத்துடனான சந்திப்பில் அவர் செய்த அறிவிப்பு குறித்து பொதுச்சபை உரையில் எதையும் காணக்கூடியதாக இருக்கவில்லை.

அது ஒரு கருதாப்பிழையோ அல்லது தெரியாமல் இழைத்த தவறோ அல்ல. ஏனென்றால், 2021 மார்ச்சில் கோட்டாபயவின் அரசாங்கம் உலக தமிழர் சபை (Global Tamil Forum ), பிரிட்டிஷ் தமிழர் சபை (British Tamil Forum) மற்றும் கனடிய தமிழர் காங்கிரஸ்(Canadian Tamil Congress) போன்ற பல புலம்பெயர் தமிழ்குழுக்களை தடைசெய்திருந்தது.

ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, இத்தாலி மற்றும் மலேசியாவில் இருந்து இயங்கும் பல தனிநபர்களையும் ஐ.நா. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அரசாங்கம் தடைசெய்தது. வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் அபிப்பிராயங்கள் மீது செல்வாக்குச் செலுத்தி பொதுக் கொள்கையொன்றைக் கட்டமைக்கிறார்கள் என்பதே அவர்கள் தடைசெய்யப்பட்டமைக்கான காரணமாகும். மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் ராஜபக்‌ஷ அரசாங்கத்தை கடுமையாக கண்டித்த பின்னரே இந்த தடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் மோசமடைவது குறித்து எச்சரிக்கை செய்த அந்த அறிக்கை சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்போர் மற்றும் உரிமைமீறல்களினால் பாதிக்கப்படுவோர் தொல்லைகளுக்குள்ளாக்கப்படுவதையும் தீவிர கண்காணிப்புக்குள்ளாக்கப்படுவதையும் வெளிச்சம்போட்டுக்காட்டியது.

தமிழர் பிரச்னையை ஒரு முடிவுக்கு கொண்டுவரவேண்டியது இந்தியாவுக்கு முக்கியமானது என்பதை இலங்கை விளங்கிக்கொள்ளவேண்டியது அவசியமாகும். இலங்கை அரசாங்கமும் தமிழ் அரசியல் சமுதாயமும் பேச்சு மேசைக்கு வரத்தயாரென்றால், இது விடயத்தில் இந்தியா அதன் நல்லெண் ணங்களை பயன்படுத்தவும் கூடும். இது இலங்கையில் இந்திய முதலீடுகளுக்கு (குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கும் நாட்டின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கும் ) வரக்கூடிய தடையை அகற்றும். இதைச் சாதிப்பதற்கு ஜனாதிபதி ராஜபக்‌ஷ தனது ஐ.நா.உரையின் தொனிப்பொருளாக அமைந்த பொருளாதார சுபீட்சத்தை பற்றி கூறியவற்றை செயலில் காட்டவேண்டியிருக்கிறது.

இலங்கை பாராளுமன்றத்தில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மிகப் பெரிய அணியான தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இன நல்லிணக்கத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து தங்களுடன் பேசவருமாறு விடுத்த அழைப்புக்கு ஜனாதிபதி ராஜபக்‌ஷ இன்னமும் பதிலளிக்கவில்லை. அதனால், ஜனாதிபதி உள்நாட்டில் தமிழர் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து குறிப்பிடுகிறார் என்றால், யாரை அவர் அடையாளம் காட்டுகிறார். இதேயளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியொன்று இருக்கிறது; தங்களுக்குள் பிசகுப்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் பேச்சுகளில் பங்கேற்பதற்கு பொது நிலைப்பாடொன்றுக்கு வரத்தயாரா?

உள்நாட்டில் அரசியல் கட்சிகளுடனும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடனும் பேச்சொன்றை நடத்துவதில் ஜனாதிபதி கருத்ததூன்றிய அக்கறையுடன் இருக்கிறார் என்றால், சில தனிப்பட்டவர்கள் மீதும் பலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதும் விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டியிருக்கும். அர்த்தபுஷ்டியான முன்னேற்றத்தைக் காண்பதற்கு சகல தரப்பினரையும் உள்ளடக்கிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டுமேயன்றி, தெரிந்தெடுக்கப்பட்ட சில தரப்பினரை மாத்திரம் உள்ளடக்கக்கூடாது. ஆனால், ராஜபக்‌ஷ அரசாங்கம் உள்நாட்டுப் பிரச்னைகளில் சர்வதேச நிறுவனங்கள் சம்பந்தப்படுவதை கடுமையாக எதிர்க்கும் நிலைப்பாட்டைக் கொண்டதாகும். இந்த நிலைப்பாட்டை இந்தியா உட்பட பல நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. நிலைபேறான சமாதானத்தைக் காண்பதற்கு உள்நாட்டு நிறுவனங்கள் ஊடாக பொறுப்புக்கூறலும் நிலைமாறுகால நீதியும் அர்த்தபுஷ்டியான நல்லிணக்கமும் முன்னெடுக்கப்படுவது அவசியம். அதுபோன்றே பொருளாதார அபிவிருத்தியின் விளைபயன்களையு ஒப்புரவான முறையில் பகிர்ந்துகொள்ளவேண்டியது அவசியம் என்பதில் ஜனாதிபதி ராஜபக்‌ஷ உறுதியாகவுள்ளார்.

கடந்த ஒன்றரை வருடகாலத்தில் கூறியவற்றை அரசாங்கம் செயலில் காட்டுவதற்கு அரசாங்கம் அக்கறையுடனான முயற்சிகளை எடுத்திருந்தால், ஐ.நாவில் கூறிய பலம்பொருந்திய மேற்படி வார்த்தைகள் மேலும் வலுவான அர்த்தத்தைக் கொண்டிருந்திருக்கும்.

ஆனால், சர்வதேச தலையீட்டைத் தவிர்க்கவேண்டுமானால், உள்நாட்டு நிறுவனங்கள் செயல்திறனுடையவையாக - வாக்களித்தவற்றைச் செய்யக் கூடியவையாக இருக்கவேண்டும். ஈழப்போர் முடிவடைந்து 12 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட, இனநல்லிணக்கச் செயன்முறைகளை தூண்டிவிடுவதற்கு அவசியமான நிலைமாறுகாலநீதி இன்னமும் அரைகுறையாகவே இருக்கிறது. ஜனாதிபதி சிறிசேனவினால் 2018 அமைக்கப்பட்ட காணாமல் போனோர் விவகார அலுவலகம் நல்லிணக்கச் செயல்பாடுகளின் மூலமாக விளைபயன்களைக் காட்டமுடியாமல் இருப்பதற்கான சிக்கல்களுக்கு நல்ல ஓர் உதாரணமாகும். காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய 29 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் 2020 டிசெம்பர் வரையில் அந்த அலுவலகத்துக்கு கிடைத்திருக்கின்றன. 2021 ஜனவரியில் இலங்கையில் உள்ள ஐ.நா.வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கருடனான சந்திப்பொன்றில் ஜனாதிபதி ராஜபக்‌ஷ காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை கையாளுவதற்கான தனது திட்டங்களை விளக்கிக்கூறியிருந்தார்.

காணாமல்ஆக்கப்பட்டோர் உண்மையில் இறந்துவிட்டார்கள் என்று ஜனாதிபதி கூறினார். அவர்களில் பெரும்பாலா வர்கள் புலிகளினால் கூட்டிச்செல்லப்பட்டார்கள் அல்லது பலவந்தமாக புலிகளின் படையணிகளில் சேர்க்கப்பட்டார்கள். விசாரணைகளுக்கு பிறகு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அத்தாட் சிப்பத்திரம் உறவினர்களுக்கு வழங்கப்படும். குடும்பங்களுக்கு 6000 ரூபா உதவி வழங்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார். இந்த நடவடிக்கைகள் அந்த குடும்பங்களை திருப்திப்படுத்தவும் இல்லை, ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்தவும் இல்லை. ஆனால், இந்த பிரச்சினை முழுவதையும் தமிழ் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாகவே ஜனாதிபதி நோக்குகிறார்.

சிறைச்சாலைகள் முகாமைத்துவ அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்தையின் அண்மைய தவறான நடத்தை இந்த அரசாங்கத்தில் உள்ள தவறுகளுக்கெல்லாம் அடையாளமாக எடுத்துக்கொள்ளக்கூடியதாகும். தனது வெற்றிகரமான ஆட்சிமுறையை உலகிற்கு வெளிக்காட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய செப்ரெம்பர் 6 தனது ஐ.நா. உரையை தயார் செய்துகொண்டிருந்திருக்கக்கூடிய அதே நேரத்தில், மது போதையில் லொஹான் துப்பாக்கியுடன் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் பலவந்தமாக 6 பேர் கொண்ட குழுவுடன் பிரவேசித்தார். கைதிகளைப் பார்வையிடும் வழமையான நேரம் அல்ல அது. 6 நாட்கள் கடந்து அவர் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு ஹெலிகொப்டரில் பறந்து சென்றார். அதுவும் மதுபோதையில்தான். கையில் துப்பாக்கியை வைத்துக்கொண்டு தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு குழுவினரை அழைத்து தங்களது குற்றங்களை ஒப்புக்கொள்ளுமாறு அச்சுறுத்தினார். அந்த கைதிகள் 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். ஊகங்களினாலும் எதிரணியினாலும் பலத்த கண்டனத்துக்கு பிறகு அமைச்சர் சிறைச்சாலை முகாமைத்துவ பொறுப்பில் இருந்து விலக நிர்ப்பந்திக்கப்பட்டார்.

சட்டத்துக்கு பயப்படாமல் குற்றங்களைச் செய்துவிட்டு சுதந்திரமாக திரியும் போக்கு இந்த அரசாங்கத்தின் கீழ் இமாலய உயரத்துக்கு அதிகரித்துவிட்டது. கொடுமையான பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதாக அரசாங்கம் திரும்பத் திரும்ப கூறுகின்ற போதிலும் ஆட்களை விசாரணையின்றி தடுத்துவைப்பதற்கு அந்த சட்டம் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

"1971, 1989 ஆண்டுகளில் இடம்பெற்றதைப் போன்ற ஆயுதக்கிளர்ச்சிகள் பெரும்பான்மையினரான சிங்கள - பௌததர்களிடமிருந்து தற்போதைய சூழ்நிலையில் வரப்போவதில்லை" என்று இலங்கையின் அரசியல் ஆய்வாளர்களில் ஒருவரான அசங்க அபேகுணசேகர புதுடில் லியில் இயங்கும் ஒப்சேவர் றிசேர்ச் நிறுவனத்துக்கு எழுதிய கட்டுரை ஒன் றில் கூறுகிறார்.

இலங்கையும் இந்தியாவும் பூகோளத் தொடர்பு காரணமாக தேசிய பாதுகாப்பில் பரஸ்பர அக்கறை கொண்டிருக்கின்றன. இலங்கை நிலைகுலைந்தால் அதனால் இந்தியாவுக்கு பாதுகாப்புச் சவால் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தற்போதைய இரு தரப்பு உறவை ஒரு மூலோபாய மட்த்துக்கு உயர்த்தவும் வெளிநாட்டு முதலீடுகள், மற்றும் ஏற்றுமதி மூலமான சம்பாத்தியத்தை வலுப்படுத்தி பாதுகாப்பு மற்றும் இந்து சமுத்திரத்தின் பந்தோபஸ்தில் மூலோபாய ஒத்துழைப்பை விஸ்தரிக்கவும் இலங்கை விரும்புகிறது என்று இந்தியாவுக்கான புதிய இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட கூறுகிறார்.

இதைச் சாதிப்பதற்கு இலங்கை அதன் பெரும்பான்மையினவாத சிங்கள - பௌத்த அரசியலை தணிக்கவேண்டும் நிர்வாகத்தை இராணுவ மயமாக்குவதை தளர்த்த வேண்டும் இந்திய முதலீட்டாளர்களுக் கும் ஒப்புரவான வாய்ப்புக்களை வழங்க வேண்டும். இவை எல்லாவற்றையும் போலவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலைமாறுகால நீதி வழங்கப்படுவதை யும் இன நல்லிணக்கச் செயன்முறை மீள ஆரம்பிக்கப்படுவதையும் உறுதி செய்வதில் கண்ணால் பார்க்கக் கூடிய முன்னேற்றத்தை காட்வேண்டும். ■

## பெருந்தொற்றாக மாறியுள்ள நில ஆக்கிரமிப்பு;

# எமது இருப்பு, அடையாளத்தை இல்லாமல் செய்யும் பேராபத்து

“தமிழ் மக்களுக்கு எதிராக வடக்கு, கிழக்கில் கடந்த 70 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு இன்று ஒரு பெருந்தொற்றாக மாறியிருக்கிறது. இது எமது நிலத்தை மட்டுமன்றி எமது இருப்பு, அடையாளம் ஆகியவற்றையும் இல்லாமல் செய்யும் அபாயகரமான நிலையை அடைந்திருக்கின்றது. படையினர், திணைக்களத்தினர், புத்த பிக்குகள் போன்ற பலரின் ஒருமித்த செயற்பாட்டுடன் இந்த நில ஆக்கிரமிப்பு நடந்தேறிவருகின்றது” எனத் தெரிவித்திருக்கின்றார் வடமாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்.

**நேர்காணல் ஒன்றில் இதனை அவர் தெரிவித்தார். அவரது நேர்காணலின் விபரம் வருமாறு:**



சி.வி.விக்னேஸ்வரன் சொல்கிறார்

**கேள்வி:** தமிழ் மக்களுடைய காணிகள் அபகரிக்கப்படுவதை வெளிப்படுத்தும் தாய் நிலம் என்ற ஆவணப்பட வெளியீட்டை கடந்த வாரம் ஏற்பாடு செய்து நடத்தியிருந்தீர்கள். இன்றைய கால கட்டத்தில் இது எந்தவகையில் முக்கியத்துவம் பெறுகின்றது?

**பதில்:** மக்களின் துன்பங்கள், துயரங்கள், மனித உரிமை மீறல்களை வெளி உலகத்துக்கு கொண்டுசெல்வதிலும் உண்மையை வெளிப்படுத்தி சர்வதேச சமூகத்தின் மனசாட்சி கதவுகளை திறக்க வைப்பதிலும் ஆவணப் படங்கள் முக்கிய பங்கு வகிக்க முடியும். தமிழ் மக்களுக்கு எதிராக வடக்கு கிழக்கில் கடந்த 70 வருடங்களாக மேற்கொள்ளப் பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு இன்று ஒரு பெருந்தொற்றாக மாறியிருக்கிறது. இது எமது நிலத்தை மட்டுமன்றி எமது இருப்பு, அடையாளம் ஆகியவற்றையும் இல்லாமல் செய்யும் அபாயகரமான நிலையை அடைந்திருக்கின்றது. படையினர், திணைக்களத்தினர், புத்த பிக்குகள் போன்ற பலரின் ஒருமித்த செயற்பாட்டுடன் இந்த நில ஆக்கிரமிப்பு நடந்தேறிவருகின்றது. உள்ளூர் தமிழ் மக்கள் பலருக்குக் கூட இது பற்றி சரியான புரிந்துணர்வு இல்லை. அதனால் தான் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இந்த ஆவண பட வெளியீட்டை ஏற்பாடு செய்திருந்தோம். மிகவும் நம்பகத் தன்மையான முறையில் சர்வதேச தரத்துக்கு அமைவாக இந்தப் படம் தயாரிக்கப் பட்டுள்ளது.

கொள்கைவகுப்பாளர்கள், அரசியல்வாதிகள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள் ஆகியோர் மத்தியில் இந்த ஆவணப் படம் தாக்கத்தை செலுத்தும் என்று நம்புகின்றேன். பொது மக்கள் பலர் கூட இப்படி எல்லாம் நடக்கின்றது என்று நாங்கள் அறிந்திருக்கவில்லை என்று தொலைபேசியில் எடுத்துக் கூறினார்கள். இந்த ஆவண படம் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தை மையப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. மன்னார், கிளிநொச்சி மற்றும் வடக்கு - கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் கூட பெரும் அளவில் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவற்றை ஆய்வு செய்து உண்மையான தகவல்கள், புள்ளிவிபரங்கள் போன்றன திரட்டப்பட்டு மேலும் இதுபோன்ற ஆவணப் படங்களை வெளிக் கொண்டுவர இருக்கின்றோம். இன்றைய காலகட்டத்தில் கண்ணால் காண்பவற்றிற்குத்தான் மவுசு அதிகம். வெறும் செய்திகளிலும் பார்க்க கண்ணால் பார்க்கும் விடயங்களையே மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். அதனால்த்தான் இந்த ஆவணப் படம் முக்கியத்துவம் பெறுகின்றது.

அத்துடன் பிரத்தியட்சமாக சில விடயங்களைக் காட்டும் போது அரசாங்கம் மூடி மெழுகி விடமுடியாது. இவை எல்லாம் பொய் என்று மட்டும் கூறுவார்கள். அது மக்களிடையே எடுபடாது. இதன் தாக்கம் இப்பொழுதே உணரக் கூடியதாக உள்ளது. எப்போதோ ஒளிபரப்பிய எனது சிங்கள மொழி TV கலந்துரையாடல் ஒன்று சம்பந்தமாக தெமட்டகொடை குற்றத் தடுப்பு பொலிஸ் தமது பொலிஸ் நிலையத்திற்கு என்னை வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்கள். இருந்து பார்ப்போம்.

**கேள்வி:** வெளிநாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் பலரும் இந்த நிகழ்வில் பங்குகொண்டிருந்தார்கள். பார்வையாளர்களாகவும் வந்திருந்தார்கள். இலங்கையில் இடம்பெறும் காணி அபகரிப்பு குறித்து அவர்களுடைய கருத்து என்ன?

**பதில்:** இது ஒரு கண்டிக்கத்தக்க மனித உரிமை மீறல் என்று அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் பாலஸ்தீனத்தில் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் இஸ்ரேலுடன் இலங்கையை ஒப்பிட்டு அவர்கள் பேசியுள்ளனர். இரு நாடுகளிலும் இன ரீதியான ஆட்சி முறைகள் (Ethnocratic regimes) நடைபெறுகின்றன என்று கூறினார்கள். சர்வதேச மட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தமிழ் மக்கள் பல்வேறு விதங்களில் தொடர்ந்து போராட வேண்டும் என்பதும், இந்தப் போராட்டங்கள் நிச்சயம் பலாபலன்களைக் கொண்டுவரும் என்பதும் அவர்கள் கூறியுள்ள சுருக்கமான செய்தி. இன ரீதியான ஓர் அரசாங்கம் இலங்கையில் நிலை கொண்டுள்ளது என்று சர்வதேச மட்டத்தில் புகழ் பெற்ற இஸ்ரேலிய பேராசிரியர் ஒருவர் கூறியமை ஒரு முக்கியமான செய்தி. அதுவும் ஓர் இஸ்ரேலியப் பிரஜை இஸ்ரேலையும் இலங்கையையும் ஒப்பிட்டு இரு நாடுகளும் இனஞ் சார்ந்த அரசாட்சியை நடத்துகின்றனர் என்று கூறுவது நாம் இதுகாறும் கூறி வந்த இனஅழிப்பு விடயத்திற்கு வலுவூட்டுகின்றது.

எம்முள் ஒரு சில அரசியல்வாதிகள் அது எப்படி இனஅழிப்பு பற்றிப் பேசலாம். அதனை நிரூபிக்க முடியுமா என்றெல்லாம் குரல் எழுப்பினார்கள். இன்று சர்வதேச மட்டத்தில் இலங்கையில் நடைபெறுவது இன ரீதியான அரசாட்சியே என்று கூறப்படுகின்றது. இப்பொழுதாவது தமிழர்க்கு நடப்பவை பற்றி மத்திய அரசாங்கங்களுக்குச் சார்பாக நொண்டிச் சாட்டுகள் கூறுபவர்கள் விழித்துக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

**கேள்வி:** மாகாண சபைகள் காணி அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய நிலை இருந்திருந்தால் இந்த நிலையைப் பெருமளவுக்குத் தவிர்த்திருக்கக்கூடியதாக இருந்திருக்கும் எனக் கருதுகின்றீர்களா?

**பதில்:** நிச்சயமாக! நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் பல நில அபகரிப்புக்களைக் கட்டுப்படுத்தினேன். மேலும் எம்மிடம் சில அதிகாரங்கள் உள்ளன என்று அறிந்தால் நில அபகரிப்பாளர்கள் எமது நிலங்களை அபகரிக்கத் தயங்குவார்கள். தற்போது மாகாணசபையைச் செயலிழக்கச் செய்வது விட்டு அரசாங்கமும் அரசாங்க அடிவருடிகளும் நில அபகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு உச்ச நீதிமன்றம் கூட துணை போயுள்ளதாக அறிகின்றேன். அதாவது மாகாணம் செயலிழந்தால் அதன் செயல்பாடுகளை மத்திய அரசாங்கம் செய்யலாம் என்ற பொருள்பட தீர்ப்பொன்று அண்மையில் வெளிவந்ததாக அறிகின்றேன். மத்தியின் பிழையை அல்லது தவறை மத்தியே தனக்கு சாதகமாக்கிக் கொள்ள உச்ச நீதிமற்றம் இடமளித்துள்ளது என்று அறிகின்றேன். விபரங்கள் இன்னமும் என்னை வந்து சேரவில்லை. ஆனால் இந்தக் கூற்று உண்மை.

**கேள்வி:** காணி அபகரிப்பு, தமிழ் மக்களின் இருப்பு அதனால் கேள்விக்குள்ளாக்கப்படுதல் போன்றன தொடர்பில் போதிய ஆவணங்களுடனான அறிக்கைகள் உங்களால் ஜெனிவா போன்ற சர்வதேச அரங்குகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதா?

**பதில்:** நிச்சயமாக! கடந்த காலங்களில் இவ்வாறு நாம் செயற்பட்டுள்ளோம். பல முக்கிய பிரமுகர்கள் இலங்கை வரும் போது அவர்களுக்கு ஆவணத்தினாலான விபரங்களைக் கையளித்துள்ளோம். தொடர்ந்தும் இந்த நடவடிக்கையில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். அண்மையிலும் பல விபரங்களைக் கடித மூலம் மனித உரிமை ஆணையாளருக்கு அறிவித்திருந்தேன். எம்மை நாடினால் உண்மை அறியலாம் என்ற ஒரு மனப்பாங்கு சர்வதேச மட்டத்தில் உருவாகி வருவது புலப்படுகின்றது. பல பிரமுகர்கள் இதனை வெளிப்படையாகவும் கூறுகின்றார்கள். அதாவது சில தமிழ் அரசியல்வாதிகள் அரசாங்கத்தின் அடிவருடிகளாகச் செயற்பட்டு உண்மையை மறைக்கத் தலைப்படுகின்றார்கள் ஆனால் நீங்கள் உண்மைக்கே முதலிடம் கொடுத்து வருகின்றீர்கள் என்று சிலர் கூறுயுள்ளார்கள். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்

6. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   (i) மரத்திலிருந்து மாங்காய்கள் .......................................... (விழுந்தது / விழுந்தன)
   (ii) மண்டபம், பல வண்ணக் கொடிகளால் ................................ (அலங்கரிக்கப்பட்டிருந்தது / அலங்கரிக்கப்பட்டிருந்தன)
   (iii) ஒவ்வொரு மலரும் .......................................... (அழகானது / அழகானவை)


7. பின்வரும் தொடர் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக.
   ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் : ..........................................

8. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   (i) ஆராட்ச்சி / ஆராய்ச்சி
   (ii) பன்னிரண்டு / பன்னிரெண்டு

9. பின்வரும் வினாக்களுக்கு உரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
   (i) தமிழில் உள்ள உயிர் எழுத்துக்களில் எத்தனை குறில் எழுத்துக்கள் உள்ளன? : ..........................................
   (ii) தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை? : ..........................................

10. பின்வரும் பிராணியின் ஆணுக்குரிய மரபுப் பெயரை எழுதுக.
   சிங்கம் : ..........................................

11. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.
   (i) Vill ........ ge    (ii) Te ........ cher

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.
   (i)  ..........................................
   (ii)  ..........................................

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
   (i) is / She / reading / book / a : ..........................................
   (ii) small / is / That / house / a : ..........................................

14. பின்வரும் இலக்கங்களுக்குரிய சிங்களச் சொல்லைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
   (i) 15 : ..........................................    (ii) 13 : ..........................................

15. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
   ஒப கதவுத? : ..........................................

16. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்தில் எழுதுக.
   32015 : ..........................................

17. | | |
   |---|---|
   | 4 | 0 |
   | 5 | 3 |

   கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.
   : ..........................................

18. தரப்பட்டுள்ள எண்களை இறங்குவரிசையில் எழுதுக.
   7401, 8400, 7275, 8280 : ..........................................

19. நீர்க் குழாய்களை இடுவதற்காக வெட்ட வேண்டிய கானின் மொத்த நீளம் $16km$ $350m$ ஆகும். மழை காரணமாக வெட்டி முடித்த தூரம் $5km$ $500m$ ஆகும். மேலும் எவ்வளவு தூரம் வெட்ட வேண்டி உள்ளது?
   : ..........................$km$ ..........................$m$

20. பதினாறு பென்சில்களில் நான்கில் மூன்று பங்குகளில் எத்தனை பென்சில்கள் உண்டு?
   : ..........................................

21. பின்வரும் திண்மப் பொருள்களுக்கு உரிய விளிம்புகளின் எண்ணிக்கையை எழுதுக.
   (i) நான்முகி : ..........................................    (ii) கனவுரு : ..........................................

22. ஒரு பிள்ளை A என்னும் இடத்திலிருந்து $15m$ தெற்கே செல்கின்றது. பின்னர் அது, அவ்விடத்திலிருந்து $15m$ மேற்கே சென்று B என்னும் இடத்தில் நின்றது. A இற்கு எத்திசையில் B அமைந்துள்ளது?
   : ..........................................

23. ஆரம்பப்பிரிவின் விளையாட்டுப் போட்டி பி.ப. 1.15 இற்கு முடிவுற்றது. விளையாட்டுப் போட்டி 4 மணித்தியாலங்கள் நடைபெற்றது எனின், விளையாட்டுப் போட்டி ஆரம்பித்த நேரம் யாது?
   : ..........................................

24. மூன்று பெட்டிகளில் இருந்த ரம்புட்டான் பழங்களின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.
   பெட்டி A - 425    பெட்டி B - 316    பெட்டி C - 532
   (i) மூன்று பெட்டிகளிலும் இருந்த ரம்புட்டான் பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   : ..........................................
   (ii) A, B ஆகிய இரண்டு பெட்டிகளிலும் இருந்த ரம்புட்டான் பழங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமனாவதற்கு பெட்டி C இல் எத்தனை ரம்புட்டான் பழங்களை இட வேண்டும்?
   : ..........................................

# சீனாவுடன் இலங்கை தற்போது நெருக்கமான உறவில் இல்லை

## சுப்பிரமணியன் சுவாமி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக். 05

இலங்கையின் கடந்த கால ஆட்சியாளர்கள் சீனாவுடன் பேணி வந்த நெருக்கமான உறவு தற்போது ராஜபக்ஷ ஆட்சியில் காணப்படவில்லை என்று பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் ராஜ்யசபா உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். சுப்பிரமணியன் சுவாமி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இலங்கை வரவுள்ளார்.

இதனிடையே இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், "இலங்கையின் உண்மையான நண்பன்



இந்தியா என்பது ராஜபக்ஷ ஆட்சியில் உறுதி செய்யப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்.


இந்நிலையில், இந்தியா - இலங்கை உறவுகளுக்கு புத்துயிர்ப்பு அளிக்கும் வகையில் பாதை வரைபடமொன்றை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட உருவாக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது என்றும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தாருடன் நவராத்திரி விழாவில் பங்கேற்குமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அவர் சில தினங்களுக்கு முன்னர் தனது ருவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது இலங்கையின் பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்கும் நிகழ்வொன்றில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் உரையாற்றவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# முன்னாள் மேலதிக அரச அதிபர் ஜுனைதா ஷெரீப் காலமானார்!

மட்டக்களப்பு, ஒக். 05



மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் மேலதிக அரச அதிபரும் பிரபல எழுத்தாளரும் இலக்கியவாதியுமான காத்தான்குடியைச் சேர்ந்த அல்ஹாஜ் ஜுனைதா ஷெரீப் நேற்றுமுன் தினம் தனது 81 ஆவது வயதில் காலமானார்.

அல்ஹாஜ் ஜுனைதா ஷெரீப் வட கிழக்கு மாகாண ரீதியாக நான்கு சாகித்திய விருதுகள், இலங்கை அரசின் கலாபூசண விருது, இலக்கிய வித்தகர் விருது உட்படப் பல விருதுகளைப் பெற்ற எழுத்தாளர் ஆவார்.

1975ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்த அன்னார், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபராகவும், முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராகவும், புனர்வாழ்வு அதிகார சபையின் மேலதிக பொது முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

அன்னாரின் ஜனாஸா இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தபோது சமயத் தலைவர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினர்.

அல்ஹாஜ் ஜுனைதா ஷெரீப்பின் ஜனாசா நேற்றுமுன்தினம் மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 95 பேர் கைது!

கொழும்பு, ஒக். 05

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 95 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 79 ஆயிரத்து 945ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த 86 வாகனங்களில் வந்த 163 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ)

# எந்தவொரு நாடும் இலங்கையை மிரட்டி பணிய வைக்க முடியாது!

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ஆக்ரோஷம்

கொழும்பு, ஒக்.05

**"எந்த நாடும் எம்மை அச்சுறுத்த முடியாது. அதேபோல் எந்த நாட்டுக்கும் நாம் அடிபணியவும் மாட்டோம்."**

**- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**



சமகால அரசியல் நிலைவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அமெரிக்காவில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட நாம் பல சர்வதேச நாடுகளின் தலைவர்களையும், அந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும் தனித்தனியாகச் சந்தித்தோம். இதன்போது எமது அரசின் வெளிநாட்டுக் கொள்கையைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

வெளிநாடுகளைப் பகைத்துக்கொண்டு செயல்படும் நோக்கம் எமது அரசுக்கு இல்லை. எதிரணியினர் கூறுவது போல் வெளிநாட்டுக் கொள்கையை நாம் இலங்கைக்கு எதிராக மாற்றியமைக்கவில்லை. அவர்கள் கூறுவது போல் நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரை வார்க்கும் நோக்கமும் எமக்கு இல்லை.

சர்வதேச நாடுகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கவே இலங்கை அரசு விரும்புகின்றது. இலங்கையின் இறையாண்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வெளிநாடுகளுடன் உறவை வளர்ப்போம். எந்த நாடும் எம்மை அச்சுறுத்த முடியாது. அதேபோல் எந்த நாட்டுக்கும் நாம் அடிபணியவும் மாட்டோம்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகள் தொடர்பில் எமது அரசின் நிலைப்பாட்டை ஜெனிவாக் கூட்ட அமர்வில் தெரிவித்துவிட்டோம். வெளியகப் பொறிமுறையை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்" - என்றார். (இ)

# விபசார விடுதி முற்றுகை; அறுவர் வசமாக மாட்டினர்

கொழும்பு, ஒக். 05

கட்டான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 50 ஏக்கர் பிரதேசத்தில், விபசார விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்டதுடன் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விபசார விடுதியை நடத்திச் சென்ற இருவர், அதற்கு உடந்தையாக இருந்த நான்கு பெண்கள் உள்ளடங்கலாக அறுவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு, எப்பாவல, அநுராதபுரம், கொடக்கவெல, பகினிகஹவெள மற்றும் கந்தர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24, 21, 36, 41, 23 மற்றும் 47 வயதுகளையுடைய அறுவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று கட்டான பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்

கொழும்பு, ஒக். 05

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச் சபையின் கூட்டத் தொடர் நடைபெற்றிருந்தது.

அதில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து, நேற்றுக் காலை 8.55 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். (இ)

# 'தாத்தா'வாக ஜனாதிபதி பேர்த்தியுடன் புகைப்படம்

கொழும்பு, ஒக். 05

எனது பேர்த்தியை முதன் முறையாக நான் தொட்டுத் தூக்கி அணைத்த அந்தத் தருணம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது என்று அமெரிக்காவிலிருந்து நேற்றுக் காலை நாடு திரும்பிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முகநூலில், பேத்தியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்துடன் இட்டுள்ள பதிவு வருமாறு:-

"அண்மையில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக நான் அமெரிக்கா சென்றபோதுதான், எனது பேர்த்தியை முதன்முறையாக நேரில் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றேன்.



எனது மகன் மனோஜ் மற்றும் மருமகள் செவ்வந்தி ஆகியோர் பெற்றோர் என்ற ஸ்தானத்தை அடைந்தமைக்கு அவர்களை நேரில் வாழ்த்தியதோடு தாத்தா என்ற ஸ்தானத்தை எனக்குத் தந்தமைக்கு எனது நன்றியையும் கூறினேன்" - என்றுள்ளது. (இ)

# துப்பாக்கியுடன் ஐவர் சிக்கினர்!

கொழும்பு, ஒக். 05

இறக்குவானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வெளிநாட்டுத் துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் மூன்றுடன் ஐவரை இறக்குவானைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இறக்குவானை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக ஓட்டோவொன்றை வழி மறித்து சோதனையிட்ட பொலிஸார் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை கைப்பற்றியுள்ளதுடன் நால்வரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் துப்பாக்கித் தோட்டாக்களை விலைக்கு வாங்கியுள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து துப்பாக்கி, தோட்டாக்களை விற்பனை செய்த நபரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கஹவத்த, அட்டகலன் பன்ன ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 21, 30, 65, 39, 49 வயதுகளையுடைய ஐவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## வெளியானது பண்டோரா பேப்பர்ஸ்:
# உலக தலைவர்கள், பிரபலங்களின் இரகசிய சொத்துக்கள் அம்பலம்!

லண்டன், ஒக். 05

வெளிநாடுகளில் கோடிக்கணக்கில் சொத்துகளை சட்டவிரோதமாக வாங்கிக் குவித்த இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்பட 91 நாடுகளின் ஜனாதிபதிகள், முன்னாள் ஜனாதிபதிகள் , அரசியல் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களின் வெளியிடப்படாத ஆவணங்களை பண்டோரா பேப்பர்ஸ் என்ற பெயரில் வெளியாகியுள்ளது.

பண்டோரா பேப்பர்ஸ் ஆவணங்களை சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையாளர்களின் கூட்டமைப்பு (ஐ. சி. ஐ. ஜே.) வெளியிட்டுள்ளது. பி. பி. சி., தி கார்டியன் நாளேடு, இந்தியாவில் தி இந்தியன் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட 150 ஊடகங்களின் பத்திரிகையாளர்கள் புலனாய்வு செய்து இந்த ஆவணங்களை வெளியிட்டுள்ளனர். ஏறக்குறைய கோடியே 90 இலட்சம் இரகசிய கோப்புகள் இதில் அடங்கியுள்ளன.

சுப்பர் ரிச் எனச் சொல்லப்படும் உலக அளவிலான பெரும் கோடீஸ்வரர்கள் வெளிநாடுகளில் வாங்கிக் குவித்த சட்டவிரோத சொத்துகளின் நிதி விவகாரங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சர்வதேச புலனாய்வு பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில், “இந்தியாவின் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், பொப் பாடகர் திவா சகிரா, ஆகியோர் வெளிநாடுகளில் வாங்கிக் குவித்த சொத்துகளின் இரகசிய ஆவணங்கள் கிடைத்துள்ளன.

பாகிஸ்தான் அரசியல் தலைவர்கள் பல்வேறு நாடுகளில் வாங்கிய சொத்துகள், பல நிறுவனங்களில் செய்துள்ள முதலீடுகள் குறித்தும் பண்டோரா பேப்பர்ஸ் வெளிக்கொண்டு வந்துள்ளது. இந்த முறை பிரதமர் இம்ரான் கானுக்கு நெருக்கமானவர்கள் வெளிநாடுகளில் வாங்கிய சொத்துகள், நிதியமைச்சர், நிதி அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், ஜோர்தான் நாட்டின் அரசர், உக்ரைன் ஜனாதிபதி, கென்யா, ஈக்வெடார் நாட்டின் பிரதமர்கள், செக் குடியரசின் பிரதமர், பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் நிதி செயல்பாடுகள், ரஷ்யாவின் 130 கோடீஸ்வரர்களின் பெயர்கள், அமெரிக்கா, துருக்கி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் கோடீஸ்வரர்களின் பெயர்கள் அடங்கியுள்ளன.

உலக நாடுகளின் தலைவர்கள், அதிபர்கள், பிரதமர்கள், கோடீஸ்வரர்கள், பிரபலங்கள் பல்வேறு நாடுகளில் வாங்கிய சொத்துகள், போலி நிறுவனம் உருவாக்கி அதில் சேர்த்துள்ள சொத்துகள் என்பன பற்றி இதில் தெரிவிக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் உள்ள 956 நிறுவனங்களின் இரகசிய ஆவணங்கள், பல்வேறு நாடுகளின் அதிகாரமிக்க 356 அரசியல் தலைவர்கள், உயர் அதிகாரிகள் பெயர்கள், அமைச்சர்கள், தூதர்கள் உள்ளிட்டோர் இதில் சிக்கியுள்ளனர்.

பணக்கார நாடுகளால் உருவாக்கப்பட்ட நிதி இரகசிய முறையால் உலகெங்கும் சட்டத்தின் ஆட்சி எவ்வாறு வளைந்து ஒடிந்தது என்பதை, சமமற்ற நோக்கை இந்த விசாரணை வழங்குகிறது. உலகளாவிய அரசியலில் எந்த அளவுக்கு ஆழமாக இரகசிய நிதி ஊடுருவி இருக்கிறது என்றும், வெளிநாடுகளில் சட்டவிரோத நிதிப் பதுக்கல், முதலீடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசாங்கங்களும் உலகளாவிய அமைப்புகளும் ஏன் சிறிய முன் னேற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதற்கான ஆய்வுகளையும் அறிக்கை வழங்குகிறது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதை விருந்து நடத்தினார்; ஷாருக்கானின் மகன் கைது!



மும்பை, ஒக். 05

பொலிவூட் சுப்பர் ஸ்ரார் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கான் உள்ளிட்ட பலர் மும்பை போதை ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மும்பையில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு கப்பல் ஒன்றில் போதை விருந்து நடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதில் கோடீஸ்வரர் குடும்பங்களை சேர்ந்தவர்கள், திரையுலகம், மொடலிங் பிரபலங்கள் எனப் பலர் பங்கேற்றுள்ளனர் என்று கூறப்பட்டது.

போதை ஒழிப்பு பிரிவினர் நடத்திய அதிரடி நடவடிக்கையில் இந்தக் கப்பல் சிக்கியது. அதில் இருந்த 8 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானும் உள்ளடங்குவார்.

அவர்கள் கொக்ஹெய்ன் போதை மருந்தை பயன்படுத்தியமை தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட அவர்கள் மருத்துவ பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர். (ஐ)



## உத்தரப்பிரதேசம் வன்முறை; விவசாயிகள் போராட்டம் தீவிரம்!

புதுடில்லி, ஒக். 05

உத்தரபிரதேச மாநிலம் லக்கிம்பூர் கெரி நடந்த வன்முறை சம்பவத்தால் பஞ்சாப்பில் மீண்டும் விவசாயிகள் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் லக்கிம்பூர் கெரி அருகே உள்ள மத்திய இணை அமைச்சர், துணை முதல்வர், ஆளும் பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க.) தலைவர்கள் ஒரு நிகழ்வில் பங்கேற்பதற்காக சென்றுகொண்டிருந்த போது விவசாயிகள் கறுப்பு கொடி போராட்டம் நடத்தினர்.

அந்த சமயம் விவசாயிகளுக்கும் பா. ஜ. கவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதன்போது மத்திய இணை அமைச்சர், துணை முதல்வரின் வாகனங்கள் விவசாயிகளுக்கு மத்தியில் புகுந்தது. இதில், 4 விவசாயிகள், பா. ஜ.கவினர் 4 பேர் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். ஏராளமான விவசாயிகள் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து, இந்திய மத்திய அரசாங்கத்தின் வேளாண் துறை சட்டத்துக்கு எதிராக கடந்த ஒரு வருடமாக தொடர் போராட்டம் நடத்தி வரும் பஞ்சாப் விவசாயிகளின் போராட்டம் மேலும் தீவிரமாகியுள்ளது.

இதேசமயம், இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி இன்றைய தினம் நாடளாவிய போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, இந்த சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சம்பவத்துக்கு காரணம் என்று கூறப்படும் மத்திய இணை அமைச்சர் அஜய் குமார் மிஸ்ராவின் மகன்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு 45 இலட்சம் இந்திய ரூபாய் நட்டஈடும், அரச வேலையும், காயமடைந்தவருக்கு 10 இலட்சம் இந்திய ரூபாயும் வழங்கப்படும் என்று உத்தரப்பிரதேச அரசு அறிவித்துள்ளது. (ஐ)

## கொரிய நாடுகளிடையே தொடர்பாடல் மீள ஆரம்பம்!

சியோல், ஒக். 05

தென்கொரியா, வடகொரியா நாடுகளிடையேயான தொடர்பாடல் நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது.

தென்கொரியாவுடனான தகவல் தொடர்பு மையத்தை சில மாதங்களுக்கு முன்னர் வடகொரியா தகர்த்தது. இந்த நிலையில், நிபந்தனையற்ற வகையில் தென்கொரியாவுடன் தகவல் தொடர்புகளை பேண தயாராக இருப்பதாக வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் தெரிவித்தார். இதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

எனினும் உறவுகளைத் தொடர்ந்து நல்ல முறையில் பேணுவது தென்கொரிய அதிகாரிகளின் அணுகுமுறையை பொறுத்தது என வட கொரியா தெரிவித்துள்ளது.




வடகொரியா சமீப காலமாக தனது ஏவுகணை சோதனைகளை தீவிரப்படுத்தி வருகிறது. இந்நிலையில் இரு கொரிய நாடுகளுக்கும் இடையிலான தகவல் தொடர்பாடல் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு ஒகஸ்ட் மாதத் திற்குப் பின்னர் முதல் முறையாக இரு நாட்டு அதிகாரிகளும் தொலைபேசி ஊடாகப் பேசிக் கொண்டனர்.

இரு தரப்புக்கும் இடையேயான தகவல் தொடர்பாடல் பல முறை நிறுத்தப்பட்டு பின்னர் வழமைக்குத் திரும்பியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## மம்தா பனர்ஜி தேர்தலில் வெற்றி!

கொல்கத்தா, ஒக். 05

இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தின் முதல்வர் மம்தா பனர்ஜி தன்னை எதிர்த்து போட்டியிட்ட பா. ஜ. கவின்வேட்பாளரை விட 58 ஆயிரத்து 832 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

மேற்குவங்க மாநிலத்தில் கடந்த மே மாதம் சட்டப் பேரவை தேர்தல் இடம்பெற்றது. இதில், மம்தான பனர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி பெரு வெற்றி பெற்றபோதும், நந்திகிராம் தொகுதியில் போட்டியிட்ட மம்தா பனர்ஜி தோல்வியடைந்தார். முதல்வர் பதவியை ஏற்ற அவர் 6 மாதத்துக்குள் மாநிலங்களவை உறுப்பினராக பதவியேற்க வேண்டும் என்ற நிலை இருந்தது. இதனால், பவானிபூர் மாநிலங்களவை உறுப்பினர் பதவி விலக, அவரின் இடத்திற்கு இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. கடந்த செப்ரெம்பர் 30ஆம் நாள் நடந்த தேர்தலின் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின. இதன் படி, தன்னை எதிர்த்து போட்டியிட்ட பா.ஜ.க. வேட் பாளர் பிரியங்காவை விட 58 ஆயிரத்து 832 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார் மம்தா. (ஐ)



## குக்கரை திருமணம் செய்தார் இந்தோனேசியா இளைஞர்!

ஜகார்த்தா, ஒக். 05

இந்தோனேசியாவில் இளைஞர் ஒருவர் குக்கரைத் திருமணம் செய்து, பின்னர் அதனை விவாகரத்து செய்த சுவாரசிய சம்பவம் நடந்துள்ளது.

இந்தோனேசியாவைச் சேர்ந்த கொய்ருல் அனம் என்ற இளைஞர், சில நாட்களுக்கு முன்னர் குக்கரை திருமணம் செய்த புகைப்படத்தை தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டார். இந்தோனேசிய முறைப்படி இந்தத் திருமணம் நடைபெற்றது. குக்கரும், இளைஞரும் வெள்ளை நிற ஆடைகளை அணிந்திருந்தனர். திருமணம் குறித்து கொய்ருல் அனம் கூறும்போது, “எனது மனைவி அழகாக இருக்கிறார். அதிகம்பேசமாட்டார் நன்றா கச் சமைப்பார்” என்று தெரிவித்தார். இந்த நிலையில் தனக்கான இணையாரும் இல்லை என்று கூறி, குக்கரை விவாகரத்து செய்துள்ளதாக அந்த இளைஞர் தெரிவித்துள்ளார். (ஐ)



## கொல்கத்தாவிடம் வீழ்ந்தது சன்ரைசர்ஸ் ஹைதராபாத்!

டுபாய், ஒக். 05

ஹைதராபாத் அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது கொல்கத்தா அணி.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கும் ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணியின் தலைவர் இயன் மோர்கன் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

ஹைதராபாத் அணிக்கு தொடக்கம் வாய்க்கவில்லை. சகா 0, ஜசன் றோய் 10 ஓட்டங்களுடன் வெளியேறினர். வில்லியம்சன், கார்க் இணை சற்றுப் போராடியது. ஆனால் அவர்களாலும் அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கார்க் வில்லியம்சன் 26, கார்க் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்களை பெற்றது ஹைதராபாத் அணி.

கொல்கத்தாவின் பந்துவீச்சில் ரிம் சௌதி, சிவம் மவி, வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

116 என்ற இலகு இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு ஷுப்மன் கில் சிறப்பான தொடக்கத்தை வழங்கினார். 10 பௌண்ட்ரிகளுடன் அரைச்சதம் எடுத்த அவர் 57 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

எனினும், பந்துவீச்சின் மூலம் நெருக்கடி கொடுத்தது ஹைதராபாத் அணி. ஆயினும், 19.4 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 119 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது கொல்கத்தா அணி. (ஐ)

# பெங்களூர் அணி 'பிளே ஓவ்' சுற்றில்!

சார்ஜா, ஒக். 05

துடுப்பாட்டத்தில் மக்ஸ்வெல், பந்துவீச்சில் சாஹல் சாதிக்க பஞ்சாப் அணியை 6 ஓட்டங்களால் வெற்றி கொண்டது பெங்களூர் அணி.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கும் ஐ. பி. எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த 48ஆவது போட்டியில் பெங்களூர், பஞ்சாப் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூரின் அணித் தலைவர் விராட் கோலி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

கோலி, தேவ்தத் படிக்கல் சேர்ந்து நல்ல அடித்தளம் அமைத்தனர். இடையிடையே சிக்ஸர், பௌண்ட்ரியை இருவரும் விளாசினர். 9 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 67 ஓட்டங்களை பெங்களூர் எடுத்திருந்தது. 10வது ஓவரை வீசிய ஹென்றிக்ஸ் திருப்பம் ஏற்படுத்தினார். இவரின் 'வேகத்தில்' முதலில் கோலி (25) 'போல்ட்' ஆனார். அடுத்த பந்தில் டானியல் கிறிஸ்ரியன் (0) ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மிரட்டிய ஹென்றிக்ஸ் தனது அடுத்த ஓவரில் தேவ்தத்தையும் (40 ஓட்டங்கள்) வெளியேற்ற, பெங்களூர் 11.4 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 73 ஓட்டங்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டது. ஆனால், அடுத்து இணைந்த மக்ஸ்வெல்லும் டி வில்லியர்ஸும் அதிரடி காட்டி அணியை மீட்டனர்.

டி வில்லியர்ஸ் 23 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனபோதிலும், 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளை விளாசி அரைச்சதம் கடந்த மக்ஸ்வெல் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது பெங்களூர் அணி.பஞ்சாப்பின் பந்துவீச்சில் ஹென்றிக்ஸ், முஹமட் சமி ஆகியோர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு தொடக்கம் கொடுத்த கே. எல். ராகுல், மயங்க் அகர்வால் இணை சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தியது.

இணைப்பாட்டமாக 91 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ராகுல் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து, 2 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 57 ஓட்டங்களை குவித்த மயங்க் அகர்வாலும் ஆட்டமிழக்க பஞ்சாப் அணி ஆட்டம் கண்டது.

பின்னர் வந்தவர்களில் மார்க்ரம் மட்டுமே தாக்குப் பிடித்து 20 ஓட்டங்களை எடுத்தார். இறுதி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஹர்சல் பட்டேல் அந்த ஓவரை வீசினார்.

அந்த ஓவரின் முதல் பந்தில் 16 ஓட்டங்களை எடுத்திருந்த ஷாருக் கானை ஆட்டமிழக்க செய்தார். 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 158 ஓட்டங்களையே பஞ்சாப் அணியால் எடுக்க முடிந்தது.

போட்டியின் நாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார்.

## நடுவரின் தவறான தீர்ப்பால் 'பிளே ஓவ்'ஐ இழந்த பஞ்சாப்!



சார்ஜா, ஒக். 05

மூன்றாவது நடுவரின் தவறான தீர்ப்பால் பஞ்சாப் கிங்ஸ் அணி பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கும் ஐ. பி. எல். இருபது - 20 தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் பெங்களூர் - பஞ்சாப் அணிகள் மோதின.

8ஆவது ஓவரில் ஓவரை பஞ்சாப் வீரர் ரவி பிஸ்னோய் வீச தேவ்தத் படிக்கல் எதிர்கொண்டார். ஓவரின் 3ஆவது பந்தை படிக்கல் ஸ்வீப் ஷொட் அடிக்க முயன்றார். ஆனால், பந்து படிக்கலின் கையுறையில் பட்டு எழ அதை விக்கெட் காப்பாளர் கே. எல்.ராகுல் பிடியெடுத்தார்.

பஞ்சாப் அணி ஆட்டமிழப்பு கோர மைதான நடுவர்கள் ஆட்டமிழப்பு இல்லை எனக் கூறினர். ஆனால், அணித் தலைவர் மேன்முறையீடு செய்யவே மூன்றாவது நடுவர் காணொலியை பரிசோதித்தார். பந்து கையுறையில் படுவது தெளிவாக தெரிந்தும் மூன்றாவது நடுவர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீனிவாசன் ஆட்டமிழப்பு இல்லை என்று அறிவித்தார்.

மைதானத்தில் இருந்த பெரிய திரையிலும் காட்சி ஒளிபரப்பப்பட்டது. ராகுல் அதிருப்தி தெரிவித்தபோதும், மூன்றாவது நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

அந்தச் சமயம் படிக்கல் 35 ஓட்டங்களை எடுத்திருந்தார். அவர் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்தப் போட்டியில் பஞ்சாப் அணி 6 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது. ஒருவேளை இந்த 5 ஓட்டங்கள் பெங்களூர் அணிக்கு குறைந்திருந்தால் பஞ்சாப் அணி வென்றிருக்கும், அத்துடன் பிளே ஓவ் வாய்ப்பையும் பெற்றிருக்கும்.

நடுவரின் தவறான தீர்ப்பால் பஞ்சாப் அணிக்கு இந்தத் தோல்வி கிடைத்துள்ளது. இதேபோல, கடந்த தொடரில் ஓர் ஓட்டத்தை சரியாக ஓடவில்லை என்று நடுவர் வழங்கிய தீர்ப்பால் பஞ்சாப் டில்லி கப்பிட்டல்ஸிடம் தோற்றிருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது.

இதேசமயம், மூன்றாவது நடுவருக்கு எதிராக கிரிக்கெட் வீரர்கள் பலரும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (ஐ)



## இலங்கை அணி ஓமான் சென்றது!

கொழும்பு, ஒக். 05

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் மற்றும் ஓமானுடனான இருபது - 20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி நேற்று நாட்டிலிருந்து ஓமானுக்கு புறப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகும் இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக இலங்கை அணி, ஓமான் கிரிக்கெட் அணியு டன் 2 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடவுள்ளது.

இதன்படி இலங்கை ஓமானுடன் தனது முதல் போட்டியை நாளை மறுதினமும், இரண்டாவது போட்டியை எதிர்வரும் 09 ஆம் திகதியும் விளையாடுகிறது. போட்டிகளின் பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு செல்லும். (ஐ)

# அரசுக்கு எதிராக ஓரணியில் திரள்க

## மக்களுக்கு சஜித் அழைப்பு

கொழும்பு, ஒக்.05

**நாட்டின் வளங்களைத் தாரைவார்க்கும் அரசுக்கு எதிராக மக்கள் அனைவரும் ஓர ணியில் திரள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத் துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது- "தற்போது விடியும்போது நாட்டில் எங்கோ ஓரிடத்தில் உள்ள தேசிய வளத்தை அரசால் இரகசியமாக விற்பனை செய்த செய்திகளையே கேட்கக் கூடிய தாக இருக்கின்றது.

அரசு மக்களை மரணத்தை நோக்கிக் கொண்டு சென்று, நாடு முழுவதையும் தாரை வார்க்கும் வேலைத்திட்டத்தை முற்றாகச் செயல்படுத்தி வரு கின்றது.

ஒரு புறம் 1970 மற்றும் 1977 ஆம் ஆண்டுகளில் காணப் பட்ட வரிசை யுகம் நாடு முழுவதும் உருவாகியுள்ளது. பிள்ளைகளுக்குப் பால்மா இல்லாமல் பெற்றோர்கள் கஷ்டங்களை அனுபவிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

சீனி மோசடி, தேங்காய் எண்ணெய் மோசடியை மேற் கொண்டு உற்ற நண்பர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் அரசு, மக்களின் வாழ்க்கையு டன் விளையாடி வருகின்றது. இது அரசுக்கு அந்தளவுக்குச் சிரமமான காரியமல்ல.

கொரோனாத் தொற்று நோய் உக்கிரமடைந்த நேரத் தில் பாணிகளைக் கொடுத்து உயிர்களை ஆபத்தில் தள்ளிய விதம் நாட்டு மக்களுக்கு நன் றாக நினைவில் இருக்கின்றது" - என்றார். (இ)

## வவுனியா மேலும் 15 பேருக்கு கொரோனா; ஒருவர் மரணம்!

வவுனியா, ஒக். 05

வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 12 பேர் உட்பட 15 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற் பட்டுள்ளதுடன், ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

வவுனியாவில் இனங் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர் புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட் டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோத னைகளின் முடிவுகள் சில நேற்றுக் காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரி வுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 15 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர் களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப் பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவ டிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியா வில் ஒருவர் மரணமடைந்துள் ளார். தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஆண் (வயது 59) ஒரு வரே மரணமடைந்தவராவார்.

அவரின் சடலத்தை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவ டிக்கைகளை சுகாதாரப் பிரிவி னர் முன்னெடுத்துள்ளனர். (இ)

## டிஜிற்றல் கையொப்ப பயன்பாட்டை அதிகாரபூர்வமாக்கிய நீதி அமைச்சு

கொழும்பு, ஒக். 05

நீதி அமைச்சின் டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்தின் கீழ் டிஜிற்றல் கையொப்பங்களின் பயன்பாடு நேற்று அதிகார பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

டிஜிற்றல் மயமாக்கல் சட்ட சீர்திருத்த ஆலோசனைக் குழு வின் நியமனத்துக்கான நியம னக் கடிதங்களில் கையெழுத் திடுவதன் மூலம் டிஜிற்றல் கையொப்பங்களைப் பயன் படுத்தும் திட்டத்தை நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத் தரணி அலி சப்ரி நேற்று காலை ஆரம்பித்துவைத்தார்.

கோவிட்- 19 தொற்றுநோய் களின்போது தொலைதூர கடமைகளைச் செய்வதில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங் குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

எதிர்காலத்தில், நீதி அமைச் சும் நீதிமன்றங்களும் டிஜிற்றல் கையொப்பங்களை பொதுமக் களுக்கு கடிதங்கள், ஆவணங் கள் மற்றும் அறிக்கைகள் மூலம் இணையவழியில் விரைவாகவும் திறமையாகவும் வழங்க உத்தேசித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீதிபதிக்கு அவமதிப்பு; மூவர் நேற்று கைது!

வடமராட்சி, ஒக். 05

பருத்தித்துறை மாவட்ட நீதி பதி பயணித்த காருக்கு கைகளை காண்பித்து - வார்த்தைப் பிர யோகம் செய்ததன் மூலம் அவரை அவமதித்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் நேற்று மாலை 4.20 மணியளவில் நெல்லியடி - குஞ்சர்கடை பகுதியில் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இணுவில், வவுனியா மற் றும் நெல்லியடி பகுதியை சேர்ந்த 31, 33, 36 வயது நபர்களே இவ் வாறு கைது செய்யப்பட்டனர்.

நீதிபதி யாழ். - பருத்தித் துறை வீதியில் பயணித்த போதே முச்சக்கர வண்டியில் பயணித்த மூவரும் நீதிபதியை கைகளை காண்பித்து வார்த்தை பிரயோகம் செய்துள்ளனர். சம் பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் இருந்த வீதித் தடையி லிருந்த பொலிஸார் அந்த மூவரையும் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் மூவரையும் நெல்லியடி பொலிஸார் விசா ரித்து வருகின்றனர். (ஐ-02)

## வியாழேந்திரன் எம்.பி. வீட்டின் முன்பாக நிகழ்ந்த கொலையின் வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஒக். 05

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டின் முன்பாக இடம்பெற்ற துப்பாக் கிச்சூட்டுச் சம்பவம் தொடர் பான வழக்கு எதிர்வரும் 18ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட் டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.ரிஸ் வான் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது.

வழக்கை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை ஒத்திவைத்து நீதி வான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கில் ஒரேயொரு சாட்சியே மன்றில் ஆஜர்படுத் தப்பட்டுள்ள நிலையில், ஏனைய சாட்சியங்கள் தொடர்பில் எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஏனைய சாட்சியங்கள் தொடர்பான அறிக்கையை அடுத்த தவணையில் நீதிமன் றில் சமர்ப்பிப்பதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி மட்டக்களப்பு - மன் ரேசா வீதியில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டின் முன்பாக அவரது மெய்ப்பாது காவலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

துப்பாக்கிச்சூட்டை மேற் கொண்ட இராஜாங்க அமைச் சரின் மெய்ப்பாதுகாவலர், பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டதுடன், எதிர் வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

இந்நிலையில், தனது மகனை இராஜாங்க அமைச்சரின் வீட் டில் கட்டிவைத்து அடித்து விட்டு, இழுத்துச் சென்று வீதி யில் போட்டு துப்பாக்கியால் சுட்டனர் என்று உயிரிழந்தவ ரின் தாய் மா.சின்னப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேரில் பார்த்தவர்கள் பயத் தில் சாட்சி சொல்ல மறுக்கின் றனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)


## மரண அறிவித்தல்



மலர்வு 10 - 07 - 1965

உதிர்வு 03 - 10 - 2021

**செபஸ்ரி அன்சேல் ராஜ்குமார்**

மல்லாகம் - கொழும்பு

(Annsale Construction & Anish Construction)

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட செபஸ்ரி அன்சேல் ராஜ்குமார் அவர்கள் 03.10.2021 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டக்களப்பு ஒட்டமாவடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: அன்றன்ஸ்ரனி - 0770586544

தகவல்: குடும்பத்தினர்.


## பிரேமலால் உள்ளிட்ட மூவர் தாக்கல் செய்த சீராய்வு மனு மீதான விசாரணை விரைவில்

கொழும்பு, ஒக். 05

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரே மலால் ஜயசேகர உள்ளிட்ட மூவர் தமக்கு விதிக்கப்பட் டுள்ள மரண தண்டனையை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி தாக்கல் செய்துள்ள சீராய்வு மனு மீதான விசார ணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிப் பதற்கு மேன்முறையீட்டு நீதி மன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த மனு நேற்று பந்துல கருணாரத்ன மற்றும் ஆர். குருசிங்க உள்ளிட்ட நீதிபதிகள் குழாத்தினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2015 ஜனாதிபதித் தேர்த லின்போது மைத்திரிபால சிறி சேனவின் தலைமையில் இடம் பெறவிருந்த மக்கள் சந்திப்புக் காகமேடை அமைத்துக் கொண்டி ருந்தவர்களை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தி ஒருவரைக் கொலை செய்தமை மற்றும் இருவரைப் படுகாயமடையச் செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பிரதிவாதியான பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றத் தால் மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.



2020 ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பை இரத்துச் செய்து, குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து விடுதலை செய்யு மாறு கோரி குறித்த மூவரும் மனுத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் இலஙகையில் தடைப்பட்டது. எனினும், நேற்று பகல் முதலே பல்வேறு நேரங்க ளில் உலகம் முழுவதும் தடைப்பட ஆரம்பித்து விட்டன.

பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்ராகிராம் மற்றும் மெசெஞ்சர் என்பவை பேஸ்புக்கை தாய் நிறுவனமாகக் கொண்டவையாகும்.

இந்தத் தடை குறித்து பேஸ்புக் நிறுவனம், “மன்னிக்கவும் ஏதோ தவறு நேர்ந்து விட்டது. விரைந்து வேலை செய்கிறோம். எங்களால் முடிந்தவரை அதனை சரிசெய்வோம்”, என்று தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

எனினும், செயலிழந்தமைக்கான காரணம் குறித்து எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

இதேசமயம், இந்த ஆண்டில் ஜூன், ஏப்ரல் மாதங்களிலும் பேஸ்புக் செயலியில் சிக்கல்கள் ஏற்பட்டு செயலிழந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐரோப்பிய ஒன்றி யம் நிபந்தனை விதித்திருந்த நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளார்.

நேற்றுக் காலை மிரிஹானவில் உள்ள அவரது இல்லத்தில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிய ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் அமைப்பின் கீழ் ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுடன் இலங்கையின் இணக்கம் குறித்தும், இலங்கையுடன் இணைந்து செயல்படுவது குறித்தும், இலங்கை மீதான ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பார்வை குறித்தும் இந்த குழு ஆய்வு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியக் குழு கவனம் செலுத்தியதுடன், அரசியல் தீர்வின் அவசியத்தை சுட்டிக்காட்டியது.

இந்த பயணத்தின் முடிவுகளின் அடிப்படையில் ஐரோப்பிய ஆணைக் குழு மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றுக்கும் முறையான அறிக்கையை சமர்ப்பிக்கப்படும் என்று குறிப்பிட்ட குழுவினர், இலங்கைக்கு தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

தேவையான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், நீதி அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரின் அறிக்கைகளின் அடிப்படையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விதிகளைத் திருத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

இன்று உலகில் மனித உரிமைகள் தொடர்பான மாநாடுகளுக்கு கட்டுப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தில் கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் மற்றும் முழுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசு எதிர்கொண்ட தடைகளையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இருந்தபோதிலும், நீடித்த போரினால் ஏற்படும் பல பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கவும், ஜனநாயகத்தை நிலைநாட்டவும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு அரசு எடுத்த நடவடிக்கைகளை ஜனாதிபதி விளக்கினார்.

காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் காணாமற்போனவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழ் அரசியல் கட்சிகள், புலம்பெயர் தமிழ் உறுப்பினர்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இணைந்து நாட்டின் உள் பிரச்னைகளை தீர்த்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லவேண்டும் என்றும் ஜனாதிபதி ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் கூறினார்.

சிவில் சமூக அமைப்புகளுடன் புரிந்துணர்வுடன் இணைந்து பணியாற்றுவதாகவும், நாட்டின் நல்லிணக்கம் மற்றும் வளர்ச்சிக்கு அவர்களின் ஆதரவை நாடுவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

அரசு ஜனநாயக முறையில் செயல்பட்டாலும், ஒரு சிறிய சம்பவத்தின் அடிப்படையில் பல்வேறு தரப்பினர் தவறான கருத்துக்களை உருவாக்கி வருவது துரதிஷ்டவசமானது என்றும் ஜனாதிபதி கூறினார்.

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் நேரில் தெரிவித்தார் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ் வர்த்தன் ஷ்ரிங்லா.

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது. இதன் போதே இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன் எம்.பி., மாவை சேனாதிராஜா (முன்னாள் எம்.பி.), செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., த. சித்தார்த்தன் எம்.பி. மற்றும் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

“கோட்டாபய அரசு இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளிற்கு தயாராக இல்லை. இந்திய - இலங்கை உடன்படிக்கையின்படி அமுல்படுத்தப்பட வேண்டிய 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவும் தயாராக இல்லை. போரின் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் 13 பிளஸ் பற்றி மஹிந்த அரசு பேசியிருந்தாலும், இப்போது தலைகீழாகச் செயற்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தல்களை பிற்போட்டு, ஆளுநர்களின் ஆட்சியைத் தொடர்ந்து, மாகாண சபை ஆட்சி முறையை வலுவிழக்க செய்யும் நோக்கத்துடனேயே செயற்படுகிறார்கள். மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஆளும்தரப்பு மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து எழும் கோரிக்கையை சமாளிக்க, வரவு - செலவுத் திட்டத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், மாகாண சபை தேர்தல்களை மேலும் பின்தள்ளும் நோக்கத்துடனேயே அரசு செயற்படுகின்றது.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனில், ஆகக் குறைந்தது 13 பிளஸ் ஆவது அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு” - என்றனர்.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர்,

“13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. அதில் எந்த மாற்றமும் இல்லை. மாகாண சபை முறைமையை செயலிழக்கச் செய்யும் இரகசிய நிகழ்ச்சி நிரலில் அரசு செயற்பட முனைவதும் இந்தியாவுக்குத் தெரியும். அதனாலேயே மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத் துக் கொண்டிருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இதற்கு இந்தியா மட்டும் அழுத்தம் கொடுப்பது போதாது. தமிழ் தரப்புகளின் குரலும் வலுவாக ஒலிக்க வேண்டும். 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாணசபை முறைமையை அமுல்படுத்த வேண்டும் எனத் தமிழ்த் தரப்புகள் வலுவாக, ஒரே குரலில் கூற வேண்டும். இப்போது தமிழ்த் தரப்புகளில் இருந்து வரும் குரலின் அழுத்தம் போதாதென இந்தியா கருதுகின்றது.

தமிழ்த் தரப்புகளிடம் எத்தனை அணிகள் இருந்தாலும், குறைந்த பட்சம் இந்த விடயத்திலாவது, ஒரே குரலில் பேச வேண்டும் என்று இந்தியா கருதுகின்றது.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும்படி இலங்கை மீது நாம் அழுத்தம் கொடுக்கும் சந்தர்ப்பங்களில், 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வை தமிழ் தரப்புக்கள் அதிகம் வலியுறுத்துவதில்லை எனவும், தேர்தல் சட்டத் திருத்தத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையாக உள்ளது எனவும் அரச தரப்பில் கூறப்பட்டு வருகின்றது” - என்றார்.

எனினும், இந்த விடயத்தில் அரசு பொய்யுரைக்கின்றது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலாவாரியாக விளக்கியது.

13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வை தமிழ்த் தரப்புகளில் பெரும்பாலானவர்கள் வலியுறுத்துகின்றனர் எனவும், கூட்டமைப்பினர் அதைத் தொடர்ந்து வலியுறுத்துகின்றனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், தேர்தல் திருத்தத்துக்கு சாதாரண பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றினாலே போதும் என்ற விடயத்தையும் கூட்டமைப்பினர் தெளிவுபடுத்தினர்.

அத்துடன், வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி திட்டங்களில் இந்தியா தொடர்ந்து முதலிட வேண்டும் என்றும் கூட்டமைப்பு கோரியது.

ஏற்கனவே, இந்திய அபிவிருத்திகள் வடக்கு, கிழக்கில் அதிகளவில் நடப்பதை சுட்டிக்காட்டிய இந்திய வெளிவிவகார செயலாளர், அது எதிர்காலத்திலும் தொடரும் என்றும் உத்தரவாதமளித்தார்.

(இ)

## 768 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 18 ஆயிரத்து 76 பேர் குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 77 ஆயிரத்து 374 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## கொரேனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13,102 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 24 ஆண்களும், 19 பெண்களும் அடங்குவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## எண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ள எண்ணெய்த் தாங்கிக ளை மீளப் பெற்றுக்கொள்வதற் கான முயற்சியையே தான் முன்னெடுத்துள்ளதாகவும், இதனைத் தவிர இந்தியாவுக்கு எதனையும் கொடுக்க முயற்சிக்கவில்லை என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின் போது ஐக்கியாய் மக்கள் சக்தி எம்.பி. ஹேசா விதானகேயினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் எரிபொருள் தாங்கிகள் தொடர்பில் வெளியாகும் செய்திகளில் உண்மைகள் கிடையாது. இந்த மக்கள் புல் சாப்பிடு கின்றனர் என்று நினைத்து இதனைக் கூறுகின்றனர். ஆனால், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் என்னை சந்திக்க கேட்கவும் இல்லை. அதற்கான தேவையும் கிடையாது. நூறு எரி பொருள் களஞ்சிய தாங்கிகளும் இந்தியாவுக்கு நிரந்தரமாக வழங்கப்பட்டு விட் டன . இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அவை வழங்கப்பட்டுள்ளன ராஜீவ் காந்திக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு இடையே நடந்த ஒப்பந்தத்தில் அதன் அபிவிருத்திகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

ஆனால், நான் அவற்றை மீள எமக்கு பெற்றுக்கொள்ளும் முயற்சிலேயே ஈடுபட்டுள்ளேன். அதனால் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை. கொடுத்ததை பெறவே நான் முயற்சிக்கின்றேன். 2003 இல் செய்யப்பட்ட ஒப்பந்தம் முடிந்தாலும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக நிரந்தரமாக அவை வழங்கப்பட்டுவிட்டன என்றார்.

## நிருபமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகித்தவர். இவர், தற்போது ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் நெருங்கிய உறவினராவார்.

இவரும், இவரின் கணவர் திருக்குமார் நடேசனும், அமெ ரிக்கா சமோவா, பிரித்தானியா, வர்ஜின் தீவுகள் மற்றும் நியூஸிலாந்தில் 8 நிறுவனங்களை நிறுவியுள்ளனர் என்று பண்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லண்டன் நகரிலும் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலும் சொகுசு குடியிருப்பு தொகுதிகளை கொள்வனவு செய்வதற்காக இதில் ஒரு நிறுவனத்தை நிறுவியுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துடன் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட சில வெளிநாட்டு நிறுவனங்களுக்கு திருக்குமார் நடேசனுக்கு சொந்தமான மற்றுமொரு நிறுவனம் ஆலோசனை சேவைகளை வழங்கியுள்ளதாகவும் பண்டோரா ஆவணம் மூலம் தெரிய வந்துள்ளது.

இதனிடையே, சிங்கப்பூரிலுள்ள ஏசியாசிற்றி ட்ரஸ்ட் (Asiaciti Trust) என்ற நிறுவனமும் இந்த செயல்பாடுகளுக்கான பங்களிப்பை வழங்கியுள்ளது. 2016 ஆம் ஆண்டு நிதி தூயதாக்கல் தொடர்பில் நடேசன்மீது இலங்கையில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. சிங்கப்பூரின் ஏசியாசிற்றி ட்ரஸ்ட் நிறுவனம் ஊடாக அவரின் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் திருக்குமார் நடேசனின் மொத்த சொத்துக்களின் மதிப்பு 16 கோடிக்கும் அதிகமாகும்.

பசுபிப் கொமோடிரைஸ் (PACIFIC COMMODITIES) என்ற மற்றுமொரு நிறுவனம் ஊடாக அவர் பெறுமதியான கலை படைப்புக்களை போலி ஆவணம் தயாரித்து வரி ஏய்ப்பு செய்து தன்வசம் வைத்திருக்கிறார் என்றும் பண்டோரா ஆவணம் தெரிவிக்கின்றது.

இந்த விடயங்கள் தொடர்பில் வினவுவதற்கு ஐ. சி. ஐ. ஏ. எனப்படும் சர்வதேச புலனாய்வு ஊடகவியலாளர்கள் ஒன்றியம் திருக்குமார் நடேசன் மற்றும் அவரின் மனைவியான முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவை தொடர்புகொள்வதற்கு முயற்சித்தாலும் அவர்கள் பதிலளிப்பதை தவிர்த்துக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. நடேசன் மற்றும் நிருபமா ராஜபக்ஷவால் நடத்திச்செல்லப்பட்ட இரண்டு நிறுவனங்கள் ஊடாக மேலும் இரண்டு இலங்கையர்களுக்கு அனுகூலம் பெறப்பட்டதாகவும் பண்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu




## மரண அறிவித்தல்



மலர்வு 22 - 07 - 1958

உதிர்வு 25 - 09 - 2021

### திருமதி சோமசுந்தரம் கலாதேவி

யாழ். புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கலாதேவி கடந்த 25-09-2021 சனிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை – சீதாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், யாழ். நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி – இராசமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும், சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், பிரியங்கா, நிலக்ஷி ஆகியோரின் அன்புத் தாயாரும்,வினோத் அவர்களின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற தங்கவேலு, கலாநிதி, பேரானந்தசிவம், ஆனந்தரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,கானசரஸ்வதி, புஸ்பவதி, பாஸ்கரன், காலஞ்சென்ற சாந்தலெட்சுமி, சிவபாலன், பத்மலோஜினி, சிறிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், விஜயகுமார், காலஞ்சென்ற கணநாதன், மைதிலி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும்,ஆதேஸ், ஆதிரன், ஆரிஸ் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

கிரியை:
Wednesday, 06 Oct 2021 8:30 AM - 10:30 AM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

தகனம்:
Wednesday, 06 Oct 2021 10:30 AM - 11:30 AM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சோமசுந்தரம் - கணவர்**
**Mobile : +33616949200**

தகவல்:
**குடும்பத்தினர்**

# இந்தியா எமக்காக பேசவேண்டும்!

## யாழ். வந்த இந்திய வெளிவிவகார செயலரை வரவேற்று சீ. வீ. கே. சிவஞானம் வலியுறுத்து!



**யாழ்ப்பாணம், ஒக். 05**
**தமிழர் பிரச்னை தீர்வு குறித்து இந்தியா எமக்காகப் பேசவேண்டும். எமது நலன் சார்ந்து பேசுவதற்கு இந்தியாவாலேயே முடியும் என்று இந்திய வெளிவிவகார செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவிடம் வலியுறுத்தியுள்ளார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.**

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்த இந்திய வெளிவிவகார செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்தார். அவரை பலாலி விமான நிலையத்தில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் வரவேற்றார். பின்னர், யாழ்ப்பாணத்தின் பிரபல ஹோட்டலில் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சந்திப்பு நிகழ்வில் பங்கேற்றபோதே சீ. வீ. கே. மேற்படி விடயத்தை வலியுறுத்தினார்.

மேலும், புனர்வாழ்வின் பின்னர் விடுதலையான சுமார் 12 ஆயிரம் போராளிகள் நிர்க்கதி நிலையிலுள்ளனர். அவர்கள் வாழ்வாதாரமின்றி பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். பலர் வாழ்வதற்கு பொருத்தமான வீடுகளையே கொண்டிருக்கவில்லை. எனவே, இந்தியா வழங்கும் வீட்டுத் திட்டங்களில் முன்னாள் போராளிகளையும் உள்வாங்க வேண்டும்.

முன்னாள் போராளிகள் பலர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகளின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுகின்றனர். இதன்போது அவர்கள் சித்திரவதைகள், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகின்றனர். வழக்கு விசாரணைகளின் பின்னர் விடுதலையாகும் அவர்கள் பல்வேறு துன்பங்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான செயல்பாடுகளை நிறுத்துவதற்கு இந்தியா இயன்றளவான நடவடிக்கைகளை முன்னெடுக்கக வேண்டும்.

வடக்கு மக்களுக்கு பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றால் ஏராளமான நன்மைகள் கிடைக்கும். இவற்றின் பணிகளை இந்தியா துரிதப்படுத்த வேண்டும்.

நாம் புதிய அரசமைப்பு தொடர்பில் சிந்திப்பதுடன், அரசாங்கத்துடன் பேசியும் வருகின்றோம். ஆனால், புதிய அரசமைப்பு உருவாக்கம் பெற்று - நடைமுறைக்கு வருவதற்கு முன்பு தற்போதிருக்கும் அரசமைப்பின் விடயதானங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றார்.

சந்திப்பின் இறுதியில் கருத்துத் தெரிவித்த இந்திய வெளிவிவகார செயலர், சந்திப்பில் தெரிவித்த விடயங்கள் குறித்து நிச்சயம் கவனம் செலுத்துவேன் என்று உறுதியளித்தார். (ஐ)

# மூடப்பட்டுள்ள திரையரங்குகளை திறப்பதற்கு விரைவில் அனுமதி

கொழும்பு, ஒக். 05



நாட்டில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இசை நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் திரையரங்குகளைத் திறப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தேசிய மரபு ரிமை மற்றும் கிராமிய கலைகள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரி வித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ஹேஷா விதானகே எழுப்பிய வாய்மொழி மூலமான கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்று பரவல் காரணமாக கலைஞர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய அவர், அவர்களுக்கு உதவும் வகையில், இசை நிகழ்ச்சிகள், திரையரங்குகள் போன்ற பாரம்பரிய சடங்குகளை அனுமதிப்பதிலும் கவனம் செலுத்தப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

கொரோனா நெருக்கடியின்போது கலைஞர்களுக்கு போதுமான உதவிகளை வழங்க முடியாது போனதையிட்டு வருந்துவதாகவும் விதுர விக்ரமநாயக்க மேலும் கூறினார். (இ)

# ஐக்கிய மக்கள் சக்தி பிளவுபடவேமாட்டாது

## போலி செய்திகளை நம்பாதீர்கள் என்கிறார் ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, ஒக். 05

இன்று அரசுக்குள் இருப்பவர்கள் அரசை விமர்சிக்கும் செய்திகளை வெளியிடுவதற்குப் பதிலாக சில ஊடகங்கள் ஐக்கிய மக்கள் சக்தி பிளவுபட்டு விடும் என்று போலிச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இதனை எவரும் நம்பக்கூடாது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

ராஜபக்ஷ அரசு நாட்டை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் விற்பனை செய்கின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இன்று ராஜபக்ஷ அரசு அனைத்து முனைகளிலும் தோல்வியடைந்த வருகின்றது.

ஆட்சியாளர்களின் தோல்வியால் இன்னும் சில மாதங்களில் விவசாயிகள் ஏழையாகி, நாட்டில் பஞ்சம் ஏற்படும்.

அரசில் இருந்து பணம் சம்பாதிக்கும் சில ஊடக நிறுவனங்கள் தவறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

ஊடகவியலாளர்கள் ஊடக முதலாளிகள் விரும்பும் வகையில் செயல்படக்கூடாது - என்றார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கிடாரி.ரெமோ திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு